முரசொலி

2 அணா

ஆசிரியர்.
மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 10 — 9 — 54 | வெள்ளி | ஒலி 24

எருக்கம் பூ மாலையை ஏற்பது யார்?

பொன்முடியின் கடிதம்

அன்புள்ள குமார்,

பத்திரிகைத் தொழிலைப்பற்றி உனக்குத் தெரியாது. தேதியானவுடன் தெருக்கடைக்குப் பத்திரிகை வரவில்லையென்றால், நிந்திக்கிற கும்பலைச் சேர்ந்தவனல்லவா நீ! வாரத்திலே இரண்டு நாள் ஓய்வு கிடைத்தாலும் மீத நாட்களில், இரவையும் பகலாக்கிக் கொள்ள வேண்டிய தொல்லை மிகுந்த தொழில் பத்திரிகைத் தொழில், என்பதை நீ எப்படி அறிவாய்! ஏன் இதையெல்லாம் எழுதுகிறேன் என்று எண்ணுகிறாயா? சென்ற வாரம் நடைபெற்ற உன் தங்கையின் திருமணத்திற்கு வரமுடியாது போனதற்கான காரணங்களை நீ கேட்குமுன்னடியே சொல்லிவிடலாமென்றுதான். ஒரு வாரம் அரசியல் சூன்யமாகிவிட்டதென்றால், ஒரு எதிர்கட்சி வாரப் பத்திரிகைக்கு எவ்வளவு தடங்கல்கள் ஏற்படுகின்றன, அந்தத் தடங்கல்கள் எந்தெந்த உருவத்தில்குறுக்கிடுகின்றனஎன்பதை தொகுத்து கூறுவதற்கு எந்த ஆசிரியராலும் முடியாது என்று தான்சொல்லுவேன். மன்னித்து விடுவாய் நண்பனே! மாறாத பாசத்தை, மணவிழாவுக்கு நான் வரவில்லை என்பதற்காக கொன்றுவிடாதே! ஒரே உலைக்கூடத்தில் வாள் செய்யப் போகிறவர்கள் நாம். அதையும் மறந்துவிடாதே!

மணவிழா கவனத்தில், இரண்டு வார அரசியல் உனக்கு தெரியாது போயிருக்குமென்று தான் நினைக்கிறேன். கேரளத்திலிருந்து மிதந்து வந்த பிணவாடையை-கொட்ட மடிக்கும் தாணுப்பிள்ளையின் கொடூரச் செயலை நிரூபிக்கும் ரத்த நாற்றத்தை-மணவிழாவில் வழங்கப்பட்ட பூச்செண்டும், புதிதாகச் சேர்க்கப்பட்ட சந்தனமும் மறைத்திருக்கலாம். குமார், நீ எதிர்கட்சிப் பத்திரிகை பார்த்து பழக்கமில்லாதவன், எப்போதுமே ஒரு சம்பவத்தின் உண்மைப் படப்பிடிப்பு எதிர்க்கட்சிப் பத்திரிகைகளில்தான் காணப்படும், நீ இன்னும் அதை உணரவில்லை. எதிர்கட்சிப் பத்திரிகை படித்தால் எங்கே, நம் உள்ளம் மாறிவிடுகிறதோ என்று எண்ணுகிற வனாயிற்றே நீ. நான் சொல்லித்தான் பயனென்ன? உனது பாசறை அப்படி, உனது தலைவர்கள் அப்படி!

எத்தர்கள் தேடும் முகாம் எது?

ஆவடியிலே காங்கிரஸ் மகாசபை நடைபெறப் போகிறதாம் —ஆறு மாதங்களுக்குப் பின் ஆவடியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதுவும், மேலிடத்திலிருந்து காங்கிரஸ் பொதுக் காரியதரிசி வந்துதான் இடத்தை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. சொந்தநாட்டிலே மாநாடு நடக்கிறது — அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க அந்த மாநில அரசுக்கு அதிகாரமில்லை. அபலம்! அபலம்!!

அன்புடைத் தோழா, இடம் பார்க்க வந்த காங்கிரஸ் பொதுச் செயலாளர் பல்வந்தராய்மேத்தா பத்திரிகை நிருபர்களுக்கு பதிலளித் திருப்பதை படித்திருப்பாய். வகுப்புவாதக் கட்சியைச் சேர்ந்தவர்களை மந்திரிசபையில் சேர்த்துக் கொள்வது விரும்பத்தக்கதுதானா என்று ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு மேத்தா என்ன பதில் சொல்லியிருக்கிறார் தெரியுமா? "முதலில் வகுப்பு வாதிகளாக இருந்தவர்கள் பின்பு தங்களது கொள்கை தவறானது என்பதை உணர்ந்து தேசீய வாதிகளுடன் சேரவிரும்பக் கூடும். அவர்களை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வதில் ஆபத்தில்லை" என்று மேத்தா கூறியிருக்கிறார். மேத்தாவின் இந்தக் கூற்றை ஒப்புக் கொள்கிறாயா நீ? இந்தத் தத்துவம்சரியென்று நீ நினைக்கிறாய்? எதிரிக்கேதிரி நண்பன் என்ற கபட சூத்ரத்திற்கும் இதற்கும் என்னவித்யாசம்? வகுப்புவாதிகளாக இருந்தவர்கள் தங்கள் கொள்கை தவறானது என உணர்ந்து வந்தால் அவர்களை ஏற்றுக் கொள்வதில் தடையில்லையாம்! மேத்தா கூறுகிறார், இடைக் காலத்திலே காங்கிரசில் வந்து சேருகிறவர் களெல்லாம் —காங்கிரசின் கொள்கை, நல்ல கொள்கை என்று முடிவு கட்டித்தான் வருகிறார்கள்என்று மேத்தா நினைக்கிறார்! அவருடைய சபலத்திற்காகபரிதாபப் படுகிறோம். காங்கிரசின் ஊழல்களை மக்கள் மன்றத்தில் எடுத்தோதி அதன் மூலம் மக்களிடம் செல்வாக்குப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றவர்களை, காங்கிரஸ் இயக்கம் தன்னோடு சேர்த்துக் கொள்வதென்றால், அதைக் காட்டிலும் அவகேடு அந்த மாபெரும் இயக்கத்திற்கு என்ன வேண்டும்? அந்தப் பாவக் கறையை எத்தனை புனித காரியங்களைச் செய்தாலும் போக்க முடியாது குமார்! சந்தியிலே நிறுத்தி சாணத்தால் அடித்தவன், மீண்டும் சரசமொழி பேசுகிறானென்றால், அவன் திருந்திவிட்டானென்று பொருள்? மக்களிடத்தே மதிப்பில்லை;எனவே அவனுக்கு மாற்று கூடாரம்தேவைப்படுகிறது; அந்த நேரத்தில் அவனை ஏற்றுக்கொள்ளக் கூடிய கூடாரம் காங்கிரசைத் தவிர வேறு இல்லை; ஆகவே அந்த கொள்கை (!)க் கோமான் காங்கிரசில் சேருகிறார் என்று ஏன் கொள்ளக் கூடாது? மக்களால் வெறுக்கப்பட்ட ரஷ்புடின் மன்னன் ஜாருடன் தானே இருக்க முடிந்தது? வேண்டாமென ஒதுக்கப்பட்ட எருக்கம் பூவைவிநாயகர் சிலை தானே ஏற்றுக் கொள்ளுகிறது!

பாசறையைப் பலப்படுத்த இதுவாமுறை! காங்கிரசை எதிர்த்து நின்று தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மீண்டும் காங்கிரசில் சேருவதாக இருந்தால், பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் காங்கிரசின் பெயரால் நின்று வெற்றிபெற்றால் தான் காங்கிரசில் சேர்த்துக்கொள்ளப்படும் என்ற ஒரு நிபந்தனையை காங்கிரசின் மேலிடம் வெளியிடுமானால், அப்போது தெரியும் கொள்கை திருந்தி காங்கிரசில் இணைய வருவோர் எத்தனை பேர் என்பது? அல்லது என் தலைவர் அண்ணா சொன்னபடி காங்கிரசில் சேர வருவோர் குறைந்தது இத்தனை ஆண்டுகளுக்கு சாதாரண உறுப்பினராக இருந்துதான் பதவிக்கு வர வேண்டும் என்ற நிபந்தனை காங்கிரசில் இருக்குமானால் அப்போது அறிவாய் காங்கிரசை எத்தனை பேர் விரும்பி வருகிறார்கள் என்பதை! குமார், இந்த இருமுறைகளையும் காங்கிரசின் தலைமை பீடம் கையாளுமானால் யாராவது காங்கிரசிற்குள் நுழைவார்கள் என்று கருதுகிறாய்! நடக்காது தோழா நடக்காது!

அன்புள்ள

பொன்முடி

ஏழைகள் சர்க்காராம்!

"காங்கிரஸ் சர்க்கார் பண முதலைகளுக்கு உதவியாக இருக்கிறது என்று கூறுவது தவறு. என்றுமே அவ்வாறு இருந்ததில்லை. கருங்காலிகளுக்கு எதிராக எத்தனையோ சட்டங்களை காங்கிரஸ் அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது" என்று பொருள்பட காங்கிரஸ் பொதுச் செயலாளர் பல்வந்தராய் மேத்தா சென்றவாரம் சென்னையில் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றைப் பொய்யாக்க நாம் ஏதும் தேடிப்பிடித்து ஆதாரம் காட்டத் தேவையில்லை. அந்தக் கடினவேலையை சர்க்கார் நமக்கு விட்டு வைக்கவில்லை. இதோ பத்திரிகைச் செய்தியைபாருங்கள்.

புதுடெல்லி செ 1. டாடா இரும்பு எஃகு கம்பெனிக்கு 10 கோடி கடன் கொடுக்க சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டதாக இன்று லோக்சபையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்தார். 1958–ஜூலை வரை இந்தத் தொகைக்கு வட்டி கிடையாது.

இன்னொரு செய்திபாருங்கள்!

சென்னை ஆக 31. கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்விகற்க சம்பளச் சலுகை அளிக்கப்படுவது நினைவிருக்கலாம். ஷை குழந்தைகளின் தாய் கெஜட்பதிவில்லாத சர்க்கார் உத்தியோகஸ்தராகவும், தந்தை தனிப்பட்ட கம்பெனியில் உத்தியோஸ்தராகவும் பணியாற்றினால் ஷை சலுகை தரப்படமாட்டாது என சர்க்கார் புது உத்தரவை பிறப்பித் திருக்கிறார்கள்.

டாடாவுக்கு பண உதவியாம்-என். ஜி. ஓ. க்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகிடையாதாம்-மேத்தாசொல்லுகிறார் — 'காங்கிரஸ்-சர்க்கார் கருங்காலிகள் சர்க்காரல்ல, என்று. உலகம் நம்புமா?

தலையங்கம்

சென்னை [10—9—54] வெள்ளி

செப். 17—நாம் பிறந்த நாள் !

புலிக்குத்தியார்
மாவெட்டியார்
மழவராயர்
வணங்காமுடியார்
பொன்னுபரணம் பூண்டார்

இந்த நாள் சாதிப்பெயர்களாகத் திகழும் இந்தப் பெயர்களெல்லாம் அந்த நாள் தமிழினம் வரிப் புலியின் குடலரித்து, யானைவெட்டி, பொன்னுபரணம் பூண்டு வாழ்ந்த மழவர் பரம்பரையின் புகழுரைக்கும் வீரப் பட்டங்கள்; சங்க இலக்கியம் பொன்னுல் பதித்து, கண் போலக் காத்து வந்த தீரப் பட்டயங்கள்! அப்போதெல்லாம் அடுக்களையின் கதவுகளில் குங்குமப் பொட்டு இருந்ததில்லை; வேங்கையின் சின்னம்தான் பொறிக்கப்பட்டிருக்கும்! ஓமகுண்டங்கள்நடந்ததில்லை; பகைவரின் தலையாகிய அடுப்பிலே, இரத்தம் பெய்து, சினமாகிய தீயினுல் கோதிக்க வைத்து, வீர வளையணிந்த கைகளை அகப்பையாகக் கோண்டு, துழாவிச் சமைத்த 'வீர வேள்வி' தான் நடந்தது! பூனையைக் கண்டு பயந்தோடும் பெண்கள் சமுதாயம் இருக்கவில்லை; பொன்போலும் கொத்துடைய வேங்கையெனும் மலர் பறிக்க மகளிர் தாவும்போது, 'புலி, புலி' என்று அவர்கள் எழுப்பும் அச்சமில்லாத ஆரவாரம்தான் கேட்டது! தீம்புளியும், வெள்ளுப்பும், உப்பிட்டு உலர்த்திய கருவாடும் பெற்று தன் நாடுசெல்ல தமிழகத்துத் துறைகளிலே யவனரின் கலங்கள் காத்து நிற்கும்; அந்தக் காட்சி அலங்காரத்தைக் கண்டு களித்தோம். முத்தையும், சந்தனத்தையும் உலகத்திற் கீந்து உப்பரிகையிலே உலவினேம். அந்த வணிகரின் வழித்தோன்றல்கள்தான் இன்று, கணிகையரின் கண்வீச்சால் கருத்திழந்த வாலிபனைப்போல, வடவரின் கால் பிடித்து வாழ்விழந்து நிற்கிறேம்.

அந்த சோர்விழந்த உள்ளங்களில் துணிவு சேர்ப்பதற்குத்தான் ஈரோட்டிலே ஒரு குரல் கேட்டது; அதைத் தொடர்ந்து **1949**ம் ஆண்டு செப்டம்பர் 17-ல் அண்ணுவின் தலைமையில் தனிநாடு அமைக்க சென்னையிலே கூடினேம். அந்தத் தாயகவிடுதலைப் படையாம் தி.மு.க. வின்பிறந்த நாள்தான் அண்மையில் வருகிறது. வளர்ந்ததைக் கண்டு பூரிப்பு அடைவதற்கும், வர இருக்கும் காலங்களில் நாம் பெற இருக்கும் ஊக்கத்தை எண்ணி மனவீக்கம் கோள்வதற்கும் இது ஒரு நல்ல தருணம்.

ஒரு நாட்டின் சரித்திரத்தையே திருத்தி எழுதும் அரசியல் இயக்கத்திற்கு ஐந்து ஆண்டுகள் ஐந்து ஏடுகளைப் போலத்தான் — அதற்குள்ளாகவே மும்முனைகளில் படைகளை மோதி, மோதிலால் மைந்தர் 'ஆக்ஸ்போர்டு' பல்கலைக் கழகத்திலே படிக்க மறந்து விட்டதை நாம் கற்றுக் கொடுத்திருக்கிறேம்; முப்புரிநூலரின் ஆணவம் கப்பியிருந்த ஆட்சிக்கு வேட்டு வைத்திருக்கிறேம்; திமிங்கலமாக இந்நாடுவந்து நம் சிமிண்டை — செல்வத்தை விழுங்க நினைக்கும் வண்கணுளருக்குசாவோலை தீட்டியிருக்கிறேம். அதுமட்டுமா? காவிரி நாட்டினர் கடும் புயலால் வாடியபோது, பவுடர்பூசி பொருள் சேர்த்துக் கொடுத்தோம்; மூர்க்கர்களின் முயற்சியால் கிள்ளி எறியப் பட்ட நமது காளையரின் குடும்பத்திற்கு கணிசமான அளவிற்கு உதவியும் தந்தோம்.

இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் ஏற்ற இன்னல்கள்தான் எவ்வளவு? வருங்கால சமுதாயத்தின்

பழி —தாங்கிகளாக, இன்று பதவி தாங்கும் துரோகிகளும், தேர்தலில் தோற்று கோல்லைப் புறமாக அரசு கட்டில் ஏறியவர்களும் நம்மை ஏளனம் செய்தார்கள். அந்த நொண்டி(களின்) சிந்தை ராகமாக அமைத்து ஆனந்தப் பள்ளுபாடும் காமராசரும் நமக்கு தக்கதோரு பதில் சொல்லவேண்டிய கட்டத்திலேதான் இப்போது இருக்கிறர். இங்குளோர் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே கிண்டி மாளிகையிலே பாங்குடன் அமர்ந்து, பத்துலட்சம் பேறும் கவர்னர் துரைமகனுரின் சம்பளப் பிரச்சினையைத்தான் இங்கு குறிப்பிடுகிறேம். காமராசர், மக்கள் நலம்பேணும் ஆட்சியாளராக இருக்க விரும்பினுல், பெரும்பான்மையான மக்கள் கவர்னரின் சம்பளக் குறைவை விரும்புகின்றனர் என்பதை சட்டசபை மூலம் டெல்லி மூலவர்களுக்கு உணர்த்தலாம்; நாட்டு விடுதலைக்கு தம்மாலான பணி புரிந்தார் என்கிற உயர்வையும் பேறலாம்!

5—ஆண்டுகள் — இந்த சொற்ப காலத்திற் குள்ளாகவே திராவிட முன்னேற்ற கழகம் தாயக விடுதலைப் போராட்டத்தின் உச்ச கட்டத்தை அடைந்து விட்டது. கச்சை கட்டி களத்திலே குதித்து விட்ட காளைகள் — சாவுக்குத் துணிந்து விட்ட விடுதலை வீரர்கள் —இவர்களின் தோளிணைந்த அணிவகுப்புதான் தி. மு. கழகம்.

இந்த நேரத்லே தாயக விடுதலைக்காக தலைகோடுக்க முன் வந்தோரின் வீரக் காவியங்களெல்லாம் நம் நினைவுக்கு வருகின்றன. கி. மு. 480-ல் கிரேக்க நாட்டை நசுக்கிப் பொடி செய்ய பாரசீகர்கள் பெரும்படை கோணர்ந்தனர். கிரேக்கர்கள் தங்களைத் தாக்க வரும் எதிரியின் பெரும்பலத்தைக் கண்டு, தங்கள் உட்பூசலையெல்லாம் மறந்து ஒன்று பட்டார்கள், பாரசீகர்களுக்கு முன்னுல் அவர்கள் பின்வாங்கிச் சென்று 'தர்மாப்பைலி' என்னும் இடத்தில் பகைவரை தடுத்து நிறுத்த முயன்றுர்கள். ஒரு பக்கத்தில் மலையும், மற்றொரு பக்கத்தில் கடலும் உடைய குறுகலான வழி அது. ஆகவே ஒரு சிலர்கூட மாபெரும் சேனையொன்றை எதிர்த்து நிற்கலாம், இதை சாகும் வரையில் காப்பதற்கு **லியோனிடாஸ்** என்பவனைத் தலைவனுகக் கொண்ட முண்ணூறு வீரர்கள் அடங்கிய சிறுபடை ஒன்று நியமிக்கப் பட்டது. அந்தக் குறுகலான வழியில் ஒருவன் இறந்தால் உடனே அவன் இடத்திற்கு வேறொருவன் வருவான். பாரசீகப் படையினரால் எளிதில் முன்னேற முடியவில்லை. நெஞ்சிலேவேல்தாங்கி, வெஞ்சினத்தோடு போரிட்ட அந்த முண்ணூறு வீரர்களும் மடிந்த பிறகுதான் பாரசீகசேனை மேலே செல்ல முடிந்தது. தாயகத்தைக் காக்க அந்த குறுகலான வழியில் குருதிமழை பெய்வித்த லியோனிடாசும், அவன் வீரர்களும் கல்லில் பொறித்த கீழ்க்கண்ட செய்தி நம்மைக் கண்கலங்க வைக்கிறது; புண்ணிலே வேலாக நம் உள்ளத்தைத் தாக்கும் செய்தி இதுதான்:

"இவ்வழியாகப் போகும் நீங்கள் ஸ்பார்ட்டாவுக்குச் சென்று, நாங்கள் தேசத்தின் கட்டளைக்குப் பணிந்து இங்கே இறந்து பட்டோம் என்று அங்குள்ளவர்களுக்குச் சோல்வீர்களாக"

மரணத்தின் அடிவாரத்தில் நின்ற வண்ணம், இப்படி உணர்ச்சி இலக்கியம் வரைந்தவர்கள் சிதைந்து போன தாயகத்தின் மானத்தைச் செப்பனிட்ட காவலர்கள். தேசத்தின் கட்டளைக்குப் பணிந்து இந்த உலக வாசத்தை இழந்த லியோனிடாசும் அவர்தம் வீரர்களும் சுதந்திர இயக்கங்களின் முன்னேடும் பிள்ளைகள்-அந்த வீரர்களையும் பழிக்கும் மாபெரும்அணிவகுப்பாகத்தான் திராவிடத்தின்இனஉணர்ச்சிப் பட்டாளம்இன்று தாயகத்தின் தளை அறுக்கக் கிளம்பிவிட்டது.

[அடுத்த பக்கம் பார்க்க]

பூணூல் ஏந்திகளின் புதிய இராமாயணம்!

சென்ற கிழமை, நவாப் ராஜமாணிக்கத்திற்கு அண்ணமலை மன்றத்தில் சி.பி. ராமசாமி அய்யரால்பொன்னுடை போர்த்தப் பட்டிருக்கிறது. அது போழ்து பக்தி மார்க்க நாடகங்களின் சிறப்பு பற்றி பாரத ரத்தின ஆச்சாரியார் சிறியதொரு விரிவுரையாற்றினராம். பகுத்தறிவு புரியை வைக்கோல்போர் என்று நினைத்துக் கொண்டே, ஸ்ரீராமனின் நேர்வாரிசாம் வேதியர் வர்க்கம் அதை தகனம் செய்யும் கோக்கோடு அனுமார்களைப்பிடித்து அவர்களது வாலுக்கு தீ வைக்கின்றனர்.

★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★

கதை உருவில்!

★★★★★★★★★★[தென்னரசு]★★★★★★★★★★

'கண்ணே தமயந்தி நாட்டிலே என் போன்றுருக்கு நல்ல செல்வாக்கிருக்கிறது. அதைநான் என் வாழ் நாள் முழுதும் காப்பாற்ற வேண்டுமென்றால், நமது கள்ள நட்பு வெளிவந்திடக் கூடாது. தெரிந்துவிட்டால் எனக்கு கேடு சூழ்ந்துவிடும்—கேவலமாக மதித்து விடுவார்கள். இப்போதே, சிலர்கேட்கிறார்கள், இவன் ஏகாந்தியாயிற்றே இவனுக்கு எப்படி ஆடைஆபரங்களெல்லாம்கிடைக்கின்றன என்று என் இதய ராணியே, இச்சைத் குறியவளே, உன் வீடு நான் வருவது,என் வாழ்வின் ரகசியம் கண்ணே,என்னைவஞ்சித்து விடாதே" இப்படியெல்லாம் என்னை அவர்கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்பலமுறை.பெண்தானே நான், இதையெல்லாம் நம்பாமல் இருக்கமுடியுமா? ஊரின் ஒதுப்புறத்திலே— அவருக்கென கற்கோட்டை போன்ற மாளிகை—காவல் புரிய ஏவலாட்கள் பலர்-அந்தப் பெரிய மனிதரா ஏமாற்றப்போகிறார் என்று தான் நினைத்தேன்—அவர் போலி வேடக்காரர் என்று தெரிந்தால் என் வாழ்வை பாழாக்கிக் கொள்வேனா?

இரவு பன்னிரண்டுமணி! வழக்கத்திற்கு மாறாக அவருடைய மோட்டார் முன்னறிவிப்பு (ஹாரன்) கொடுக்காமலே வாசலில் வந்து நின்றது.

முகத்திலே மகிழ்ச்சிக்களை பொங்கி வழிய வடிவேலர், கையில் ஒரு வெள்ளிப் பெட்டியுடன் உள்ளே நுழைந்தார்.

"தமயந்தி, உன் தங்க உடலுக்கு பொன்னாபரணம் வேண்டாமென்று சொன்னேனல்லவா!"

"ஆமாம், அது தவறு என்று திருத்திக் கொண்டீர்களா, இப்போது?"

"அல்ல கண்மணி, என் தங்க விக்ரகத்திற்கு தண்டகாருண்யங்களெல்லாம் தாண்டி, முத்து மாலை கொண்டு வந்திருக்கிறேன்; உன்னை இனி கண்ணெடுத்துப் பார்ப்பவர்களெல்லாம் குருடர்களாகி விடுவார்கள் அஞ்சுகமே!"

"ஏன், நீங்கள் உங்கள் ஆட்களை ஏவி கண்களைப் பிடுங்கச் சொல்லி விடுவீர்களா என்ன?"

"குறும்புக்காரி, உன் கழுத்திலிருக்கிற முத்து மாலை உன்னைப் பார்ப்போரின் கண்ணைப் பிடுங்கி விடும் என்று சொல்கிறேன்"

எனக்கு அதற்குமேல் பேச்சை வளர்க்க மனம் வரவில்லை. முத்துமாலையைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை என்னை தூண்டிக் கொண்டே இருந்தது.

"எங்கே முத்துமாலை? கொடுங்கள் நாதா! அந்தப் பெட்டியில் தானே இருக்கிறது" என்று கூறிக்கொண்டே உரிமையோடு அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். ஒளி வீசும் ஒரு ஜோடி வைரக்கம்மலும், ஒரு முத்துமாலையும் அந்தப் பெட்டிக்குள் வெல்வெட் மெத்தையில் சுருண்டு கிடந்தன. பணம் பெற்ற அந்த நகைகள் பதுங்கிக் கிடந்ததைப் பார்த்தால், இல்லறத்துணைவனைவிட்டு, இன்னொருவனை நாடிவந்தவள், வெட்கப்பட்டு முக்காடிட்டு மூலையில் நிற்பதைப் போலிருந்தது.

"என்ன தமயந்தி, மாலையின் தரமெப்படி?—வடிவேலர் கேட்டார். "மாணிக்கத்திற்கு மாசு கற்பிப்பதா? அதுவும் என் மனதிற்கிசைந்தவர்வாங்கிவந்ததை!"

"தாசிகள் பலரைப் பார்த்திருக்கிறேன் தமயந்தி, நேசித்தவரை நினைவில் வைத்துக் கொள்ளும் நேரிழை நீ தான் பொற்கொடி" என்று கூறி முத்துமாலையை என் கழுத்தில் அணிவித்தார் வடிவேலர்.

"பாம்! பாம்!"—ஹாரன் கொடுத்துக் கொண்டே மற்

காணிக்கை தரும் வேடிக்கை !

றொரு கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். இருட்டு! ஒன்றும் புலப்படவில்லை. தலைப்பாகையோடு கூடிய கிருதா மீசைக்காரன் ஒருவன் படபடப்புடன் ஓடிவந்து வடிவேலரிடம் ஏதோ சொன்னான்-அவர் முகத்திலே இருந்த மகிழ்ச்சிக்குறி இறந்தது. "தாண்டவா, ஜாக்கிரதை !" என்று மட்டும் வடிவேலர் அவனிடம் பதிலைச்சொல்லி அனுப்பினார். அதற்குப் பிறகு வடிவேலர் என்னோடு சரியாகவே பேசவில்லை—இரவு முழுதும் பாதாம் பருப்பு லேகியத்தையும், பட்டைச் சாராயத்தையும் குடித்துக் கொண்டே மூலையைக் குழப்பிய வண்ணமிருந்தார்.

காலை நான்கு மணி!

"தமயந்தி, நகரில் திருடர் தொல்லை அதிகம். மாலையைக் கழட்டு; காலையில் தாண்டவனிடம் கொடுத்தனுப்புகிறேன் என்று சொன்னார். பொய்யைச் சொல்கிறவர்கள் பொருத்தமாகச் சொன்னால்? முத்து மாலை மீண்டும் அந்தப் பெட்டிக்குள் அடைக்கலம் புகுந்தது. வடிவேலரின் மோட்டார் ஊருக்குள் நுழைந்தது.

செங்கதிரோன் எழுந்தான்—சேவல் கூவிற்று. எதிர் வீட்டு ரேடியோ, 'வடிவேலன் வருவாரடி' என்ற பாட்டுடன் தொடங்கியது. ஆனால் அன்று மாலை வரை என் வடிவேலர் வரவில்லை. கொடுத்தனுப்புவதாகச் சொன்ன முத்து மாலையும் வந்து சேரவில்லை. மாலையிலே வந்த தினசரிப் பத்திரிகை என் எண்ணத்தை படுசூரணமாக்கி விட்டது. அதில்,

சோலையாண்டவன் கோயிலில்

வடிவேலருக்கு வரவேற்பு

இதயபுரி செப்4—

இன்று காலை 10-மணிக்கு இந் நகர் பிரமுகர் வடிவேலரால் சோலையாண்டவருக்கு 5000 ரூபா பெருமானமுள்ள முத்து மாலையும், ஒரு ஜோடி வைரக் கம்மலும் காணிக்கையாக அளிக்கப்பட்டது. கோயில் அதிகாரிவடிவேலரின் வள்ளட் தன்மையைப் பாராட்டினார். அவருக்கென கோயிலில் விசேட அர்ச்சனைகள் செய்யப்பட்டன.

என்று பிரசுரிக்கப்பட்டிருந்து. என் கண்கள் சுழன்றன. கைக்கு எட்டியது வாய்க் கெட்டவில்லையே என என்னை அறியாமல் என் உதடுகள் முணுமுணுத்தன.

ஃ ஃ ஃ

வடிவேலர் எது சொன்னாலும் இதய புரியிலே நடக்கும். டில்லி சர்க்கார் மாநில சர்க்காருக்கு இடும் கட்டளைக்கு ஒப்பானது இதயபுரியிலே வடிவேலர் இடும் கட்டளை! அம்பன் மகன் கொம்பனாக இருந்தாலும் இந்த சுந்தர பாண்டியனிடமா செல்லும் என்றுதான் நான்கூட அடிக்கடி பெருமைப் படுவதுண்டு. அந்தத் தலைகர்வத்தை வடிவேலரின் சமயோசித வேலைகள் தரைமட்டமாக்கி விட்டன.

அன்று இரவு வட்டிக்கடை வர்க்கீஸ் வீட்டிலே பெருங் கொள்ளை ! வர்க்கீசின் வாயில் துணிவைத்து அடைத்து விட்டு ஐயாயிர ரூபாய் நகையையும் அடித்துக் கொண்டு போய்விட்டார்கள் கொள்ளைக் காரர்கள். இந்தக் கொள்ளையை கண்டு பிடித்து விட்டால் நிச்சயம் அடுத்த மாதம் நாம்தான் டி. எஸ். பி. என்று எண்ணிக் கொண்டு வேவறியும் பணியில் முனைந்தேன்.

ராக்கப்பன் — ஒரு காலத்தில் பெரிய ரௌடி! இப்போது அவன் போலீசிலாக்காவுக்கு தலை சிறந்த உளவாளி—அவன் ஓடோடி வந்து, "வர்க்கீஸ் வீட்டுக் கொள்ளை வடிவேலரால் செய்யப் பட்டதுதான்" என்று சொல்லி ஏராளமான ஆதாரங்களைக் காட்டினான். மறு நாட் காலை! வடிவேலரை கைது செய்யலாமென்று கருதி போலீஸ் தலைமை அதிகாரியைக் காணச் சென்றேன் — அவர் இல்லத்திற்கு! அவர் அங்கில்லை — வடிவேலர் சோலை ஆண்டவருக்கு காணிக்கை செலுத்து கிறாராம் அழைப்பு வந்திருந்தது -- அங்கே போய்விட்டார் அவர்" என்று தெரிய வந்தது. அதற்குமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை

ஃ ஃ ஃ

வாழ்க்கையிலே நான் எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறேன் தெரியுமா? 'வடிவேலா' என அதிகாரத்தோடு என்னை அழைத்தவர்களெல்லாம் 'வடிவேலர்' என்று இப்போது ஏன் அழைக்க வேண்டும்- அவ்வளவு செல்வம் என்னிடம் சேர்ந்து விட்டது — சேர்க்கப் பட்ட செல்வம் பாவக்கறை ஏறியதாயிற்றே என்று உலகத்தார் வெறுக்கிறார்கள் ! இல்லையே ! நேற்றுக் கூடத்தான் வர்க்கீஸ் வீட்டில் கொள்ளை யடித்தேன்—முத்துமாலைக்கு மெருகிட்டு சோலை ஆண்டவருக்கு காணிக்கை யாக்கினேன்—இந்த ஒரு 'காணிக்கை' என்மேல் எத்தனை குற்றச்சாட்டுகள் இருந்தாலும் ஒழித்து விடுமே! பாவம்! தமயந்திதான் துடிப்பாள்—முத்துமாலை போய் விட்டதேயென்று!

கனவிலே!

மதுரை மீனாட்சி அம்மன் கனவில் தோன்றி தனக்கு வைர நகைகள் வேண்டுமென்றுகேட்டதால்சுமார் ரூ 3000 மெறுமானமுள்ள வைர நகைகளை யோகி ஒருவர் செப்டம்பர் 3-ந்தேதி காலைகோயில்நிர்வாகியிடம்சேர்ப்பித்து விட்டாராம்-இது செய்தி.

முன் பக்க தொடர்ச்சி

விந்தியத்தின்விளிம்பிலே நின்று தந்தையர் நாட்டை நாம் மீட்டிடும் போதுதான், பச்சைத் துரோகிகளும் இலட்சியமிழந்தவர்களும் நம்மீது பாராங்கல்லை உருட்டி விடுகிறார்கள். தலையை நசுக்கவரும் தடைக் கற்களையும் தனியரசுக் கோரிக்கையின் படிக்கற்களாக உபயோகித்துக் கொள்ளும் பக்குவம் பெற்றதுதான் (தி. மு.) கழகம். எனவேதான் கண்யமிழந்தோரின் காட்டுக் கூச்சலைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. ஆகவேதான் நாம் யாராலும் அலட்சியம் செய்ய முடியாத மாபெரும் சக்தியாக வளர்ந்திருக்கிறோம்.

அதோ; சுதந்திர சூரியன் உதிக்கப் போகிறான்; விடுதலை வேட்கையாம் விடிவெள்ளி தோன்றி விட்டது, இலட்சியக் கதிரோனே! இன்ப திராவிடமே ! இந்நாட்டுத் தனவந்தரின் இறுமாப்புக்கு இரையான குடியானவனும், வட நாட்டு முதலாளியின் திமிருக்கு பலியாகி நிற்கும் ஆலைத் தொழிலாளியும், அவன்தன் மனைவியும் நின் நல்வரவு நோக்கி நிற்கின்றனர். சுதந்திர திராவிடத்தின் சமதர்மக் குடியரசே! நீ எப்போது தோன்றப் போகிறாய்?

அவர்கள் இருவருமே நெடு நாளைய நண்பர்கள். கட்டுமஸ்தான சரீரத்துடன் குதிர் போல இருக்கும் ஒருவனுடைய பெயர்தான் பெருச்சாளி. மற்றொருவனே அவனுக்கு நேர் விரோதம்; காட்டுப் பூனை என்றால்தான் அவனை யாரென்று ஊர் மக்களுக்கு அடையாளம் தெரியும். ஒல்லியாக இருப்பான்; ஆள் நல்ல உயரம்!

காட்டுப் பூனையும், பெருச்சாளியும் இருட்டின் கருப்புப் போர்வையிலேதான் வெளியே தலை காட்ட முடியும். பகலெல்லாம் உப்பளத்திலே ஏராளமான குடியானவர்கள் நெற்றியிலே வழியும் வியர்வையை வழித்தெறிந்துவிட்டு வேலை செய்து கொண்டிருப்பார்கள். இந்த நண்பர்கள், காட்டுக்குள் நுழைவதைப் பார்த்துவிட்டால் சரி, உடனே தடிகள்சகிதம் வேலையை நிறுத்திவிட்டு, விரட்டிக் கொண்டே ஓடி வருவார்கள். ஒரு நாள் கிராமத்து தலையாரியை நண்பர்கள் கோஷ்டி சந்திக்க வேண்டியிருந்தது. "இந்தப் பக்கம் தலை காட்டினால்இடுப்பை வெட்டிவிடுவேன்பயல்களா! ஜாக்ரதை" என்று அறிவாளைக் காட்டி தலையாரி பயமுறுத்தினார். முழங்கால் அளவுக்கு மண்ணுள்ள பூமியிலே கஷ்டப்பட்டு ஓடி காட்டுப் பூனையும், பெருச்சாளியும் தப்பித்துக் கொண்டார்கள். காட்டு வழியும், கிராம வாசிகள் நடமாடாத கடற்கரை வழியும் தான் இவர்கள் பயமின்றித் தேர்ந்தெடுத்த நெடுஞ்சாலைகள். சுற்றுப் பக்கத்திலுள்ள கிராமங்களில் திருடிவிட்டு இந்தக் காட்டில் வந்து ஒளிந்து கொள்வார்கள். மாட்டுக்கு மருந்து கொடுத்து விட்டு உயிரோடு தோல் உறிப்பதிலே அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள்!

ஃ ஃ ஃ

கோடிக் கரையின் அடர்ந்த காட்டை கட்டித் தழுவ நீலக் கடல் தன் அலைக்கரங்களை நீட்டிக் கொண்டிருந்தது. நரிகளின் ஊளை. ஆந்தையின் அலறல். இந்த சப்தத்தினூடே பெருச்சாளி 'லொக்கு லொக்கு' என்று இருமிக்கொண்டே நடந்தான். அவனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த காட்டுப் பூனை தோளிலே ஒரு சாக்கு மூட்டையை சுமந்து கொண்டிருந்தான்.

"என்ன இருந்தாலும் எனக்கு இந்த தொழில் பிடிக்கவில்லை, காட்டுப் பூனை; நீ என்ன நினைக்கிறாய்?"

"ஆமாம்; பெருச்சாளி! பட்டணத்திலே ஒரு பயலை சிநேகம் பிடித்திருக்கிறேன். அந்த பிக்பாக்கெட் தொழிலைக் கற்றுக் கொண்டு அங்கேயே போய் விடலாமென்றுதான் தோன்றுகிறது"

"எனக்கென்னமோ அதுவும் பிடிக்கவில்லையப்பா. எனக்கு இந்த திருட்டுப் பிழைப்பே கொஞ்சம்கூட பிடிக்கவில்லை, கடலில் குதித்து செத்துவிடலாமா என்றுதான் தோன்றுகிறது"—இப்படி சொல்லிக் கொண்டே பெருச்சாளி பலமாக இருமினான்.

"கடலில் சாவதற்கு முன்பே இருமலே உன்னை சாகடித்து விடும் போலிருக்கிறதே! வா, வா, சீக்கிரம் போய்ச் சேருவோம்" காட்டுப்பூனை வேகமாக நடந்தான். பெருச்சாளியால் முன்போல சரியாக நடக்க முடியவில்லை. தள்ளாடியபடியே நகர்ந்தான்,

காட்டுப்பூனை மூட்டையை கீழே இறக்கிவிட்டு சிமினியைக் கொளுத்தினான். பெருச்சாளி அவசர அவசரமாக மூட்டையைப் பிரித்தான் — விநாயக சதுர்த்தி அன்று பிள்ளையாருக்கு சாத்தப்பட்டிருந்த தங்கக் கவசம்தான் அது!

"காட்டுப் பூனை, சரியாக சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகின்றன. இந்த தங்கக் கவசத்தை வைத்துக் கொண்டு அழகு பார்க்கிறோமே, இன்று சாப்பாட்டுக்கு என்னப்பா வழி செய்றது?"

"நானும் அதைத்தான், பெருச்சசாளி, யோசிக்கிறேன். இந்நேரம் கிராமத்துக் கோயிலுக்கு போலீஸ் வந்திருக்கும். நம்மை ஊரெல்லாம் தேடிக் கொண்டிருப்பார்கள். இப்போது சாப்பாட்டுக்காக ஊரிலே தலைகாட்டினால் முதுகெலும்பு நொறுங்கிவிடும். பேசாமல் தூங்கு. காலையில் பார்த்துக் கொள்ளலாம்."

ஃ ஃ ஃ

காட்டுப் பூனையும், பெருச்சாளியும் குறவர்ஜாதி; அரசாங்கத்தின் மொழிப்படி குற்றபரம்பரையைச்சேர்ந்தவர்கள். போலீசின் கண்காணிப்பிலேதான் இவர்கள் இருக்கவேண்டும்,

'அந்த குறப்பசங்கதான் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும்'—என்று ஊரெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். இன்ஸ்பெக்டருக்கும் அவர்கள் மீது கொஞ்சம் சந்தேகம்தான். மூலைக்குமூலை போலீஸ்காரர்கள் பாரா இருந்தனர்,

அந்திநேரம். பறவைகள் சப்தம் போட்டுக்கொண்டு கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. பெருச்சாளி வாயடைத்துப்போய் ஒரு மரத்தின் வேரிலே தலைசாய்த்துப் படுத்திருந்தான். இருமல் முன்னிலும் கடுமையாக இருந்தது. காட்டுப்பூனை ஒரு கல்லிலே ஏதோ ஒரு பச்சிலையை வைத்து மற்றொரு கல்லால் அறைத்துக் கொண்டிருந்தான்.

"டேய், பெருச்சாளி, உடம்பு எப்படி இருக்கிறது? இன்றைக்கு பிழைப்பு நடத்தலாமா?"

பெருச்சாளி தலையைத் திருப்பினான். "இரத்தம் வருகிறது, காட்டுப்பூனை. நெஞ்சை அடைத்துக் கொண்டிருப்பது போல் இருக்கிறது. நீ என்னப்பா செய்து கொண்டிருக்கிறாய்?"

ஒரு புன்சிரிப்பை சிந்திவிட்டு காட்டுப்பூனை முன்னிலும் வேகமாகப் பச்சிலையை அறைத்துக் கொண்டிருந்தான். ஆமாம், அந்தப் பச்சிலையை மாட்டின் மீது தடவிவிட்டால் மாடுதன் உணர்ச்சியை இழந்துவிடும். பின்னர் மாட்டை உயிருடன் வைத்தே தோலை உறித்துவிடலாம். மாட்டுத் தோலுக்கு அதிகமான கிராக்கி இருக்கும் இந்தக் காலத்தில் நபருக்கு குறைந்தது பத்து ரூபாயாவது கிடைக்கும்.

"அந்த கோடி வூட்டுக்காரன் மாட்டைப் பார்த்திருக்கிறாயா, பெருச்சாளி. அசல் வெல்வெட்டு மெத்தையாட்டம் தோல் வழ வழன்னு இருக்குதப்பா! உம்......நேற்று பிள்ளையார் கோவில்லே கொள்ளையடித்ததை, நல்ல மாடா பார்த்து ஒன்னு பிடிச்சிருந்தா இன்று வயிறு நிறைய சாப்பாடாவது கிடைத்திருக்கும் ... தங்கத்தை இப்பொழுது எப்படி, பெருச்சாளி, காசாக்குவது?"

பெருச்சாளி பலமாக இருமிக் கொண்டிருந்தான். மூச்சு வருவதுகூட கஷ்டமாக இருந்தது. வார்த்தைகளை வெளியிடவே மிகவும் அவஸ்தைப் பட்டான். ஏதோ யோசித்துக் கொண்டிருப்பதைப் போல படுத்திருந்தான்.

"பெருச்சாளி நீ இப்பொழுதெல்லாம் யோசிக்க ஆரம்பித்து ரொம்ப கெட்டுவிட்டாய்" — காட்டுப் பூனை சப்தம் போட்டே சொன்னான்.

"இல்லை, காட்டுப்பூனை! மாடு, என்றதும் என் யோசனைகள் எங்கோ சென்றுவிட்டன. தலையாரி கந்தசாமியை உனக்குத் தெரியுமா? அவன் பொண்ணு எவ்வளவு அழகா இருப்பா தெரியுமா? நான் தெருக்கூத்து ஆடும் போதெல்லாம் அவள்தான் முன் வரிசையில் உட்கார்ந்திருப்பாள். அவளை எனக்குக் கல்யாணம்— பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று தலையாரியைக் கேட்டேன், நீயோ குற்ற பரம்பரை ஜாதி, நான் எப்படியப்பா பெண் தர முடியுமுன்னு அவன் ஒரே முடிவா சொல்லிவிட்டான். எனக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. இரவோடு இரவாக அவன் வீட்டுத் தொழுவத்தில் புகுந்து பச்சிலையைத் தடவி அவன் காளை மாட்டின் தோலை உரித்து எடுத்துக் கொண்டு ஓடிவிட்டேன். காலையில் தலையாரியும் அவன் பெண்ணும் மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று பார்த்தார்கள். தோலுறிந்த மாடுதான் செத்துக் கிடந்தது. பாவம்! அந்த மாட்டை விற்றுத்தான் தலையாரி தன் மகளுக்கு கலியாணம் செய்ய இருந்தான். தலையாரி 'ஓ' வென்று அழுதான். அதற்கப்புறம், அவன் சாகும் வரையில் வாயை மூடவில்லை; அழுதுகொண்டே இருந்தான்......"

பெருச்சாளி கதையைநீட்டிக் கொண்டே போனான்.

"என்ன இருந்தாலும் மாடு திருடுவது எனக்குப் பிடிக்கவில்லை காட்டுப் பூனை" என்று பெருச்சாளி முணகினான்.

காட்டுப்பூனை இதையெல்லாம் கவனிப்பதாகத் தெரியவில்லை. "பெருச்சாளி, ஜாக்ரதையாகத் தூங்கு. நான் ஊருக்குள்ளே நுழைந்து நோட்டம் பார்த்துவிட்டு வருகிறேன்." —காட்டுப் பூனை போய் விட்டான்.

பெருச்சாளிக்கு மூச்சு திணற ஆரம்பித்தது. எழுந்து உட்காரவே மிகவும் சிரமப்பட்டான். நடந்த காலவாழ்க்கைச் சித்திரங்கள் அவன் கண்முன் நடமாட ஆரம்பித்தன. கோடி வீட்டுக்காரன் மாட்டுத் தோலை உறித்தெடுப்பது பெருச்சாளிக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை.

அந்த மாட்டை வைத்துக் கொண்டே அவன் ஜீவனம் நடத்திவந்தால்..அந்த மாட்டை விற்றுத்தான் அவன் தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டியிருந்தால்...... பெருச்சாளி அவசியமில்லாத கேள்விகளைக்கேட்டு தன் மனதைக் குழப்பிக் கொண்டான்.

இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. காட்டுப் பூனை பச்சி

(8-ம் பக்கம்)

இன்னும் விடியவில்லை!

4.

கிழவர் ஏறிக்கொண்ட தோணி கடலைக் கிழித்தபடி போய்க்கொண்டிருந்தது. பொழுது விடிய இன்னும் சில மணி நேரமே இருந்த காரணத்தால் வாடைக் காற்றின் கொடுமை அதிகமாகவே யிருந்தது. படகில் அடுக்கப்பட்டிருந்த மூட்டைகளின் இடையே அவர் கோழி போல் உடலைச் சுருட்டிக் கொண்டிருந்தார். படகில் இன்னும் சிலரும் இருந்தார்கள். ஒரு பயங்கர முகம் படைத்த கிழவன். ஒரு காலத்தில் கட்டுமஸ்தாக இருந்தது இந்த தேகம், என்று எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது அவனது உடலமைப்பு. அவன் பேசும்போது கேட்கச் சகிக்கவில்லை. அவ்வளவு கரகரப்பு. தாடிக்காக வளர்ந்திருக்கும் ரோமத்தையும் மீசையோடு இணைத்திருந்தான். பெரிய மீசைகள் இரண்டும் தோள் பட்டையில் உள்ள ஆழமான குழிகளை தொடுவற்கு முயற்சிப்பது போல தொங்கிக் கொண்டிருந்தன, படகில் அந்தப் பயங்கரக் கிழவனுடைய சப்தம் தான் பெரும் சப்தமாயிருந்தது. மற்றும் சில வாலிபர்கள் தங்கள் வேலைகளில் அக்கரை காட்டிக் கொண்டிருந்தார்கள். படகின் பாயை காற்றுத் திசைக்கு ஏற்றாற்போல திருப்பிவிட்டு பாதையை சரி செய்து கொள்வதிலே அந்த வாலிபர்கள் அதிக சிரமம் எடுத்துக் கொண்டார்கள்.

"டேய்! இருளப்பா—ஜாக்கிரதைடா! ஜாக்கிரதை!—படகைக் கவிழ்த்துடாதே—சோம்பேறித்தனமா நின்னு—கோட்டை விட்டேன்னு......அவ்வளவுதான்...... நம்ப நீஞ்சி வந்துடலாம்னு நினைச்சுக்காதே! உடமைக்காரன் உதை கோன்றுவிடுவான்! ஆமாம்..."

பயங்கரக் கிழவன் திருப்பித் திருப்பி அதையே சொல்லி விகாரக் குரலெடுத்து கத்திக் கொண்டிருந்தான். கோட்டான், எருமையின் தொனியைக் கற்றுக் கொண்டு, கூவிப் பார்ப்பதுபோல் இருந்தது அந்தக் கிழவனின் பேச்சு. அவ்வளவு கோரமான தொண்டையை அவன் திறக்காமலாவது இருந்தானா? அதுதான் இல்லை. அந்த வயதில் எவ்வளவு சுறுசுறுப்பாக அந்தப் படகிற்குள்ளே ஓடியாடி வேலை செய்தானோ; அவ்வளவு சுறுசுறுப்பாக பேசிக் கொண்டுமிருந்தான். கடலில் கூட பெரிய அலைகள் அடுத்தடுத்து வர சிறிது நேரமாகும். ஆனால் அவனது உரத்த குரலோ, நிற்காமலே ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஏய்—இருளப்பா!"

"டேய்! கொம்பேறி—தூங்கிடாதே!"

புயல்

ஆசிரியர்

"ஏண்டா—பட்டாணி!—எதுக்குடா நீ வந்தெ?மடையா! வேலையிலே கவனமாயிருடா, விதியத்தவனே!"

அவனது இந்த அதிகாரக் குரலிலே சிந்தனையை செலுத்தியவாறு பயணம் நடத்திக் கொண்டிருந்தார் கிழவர். அவருடைய பொறுமையையும் சோதிக்கிற அளவுக்கு அவன் கத்திக் கொண்டேயிருந்தான்.

"எப்பா! ஐயப்பா! கொஞ்சம் பேசாமத்தான் இரேன்!"

கிழவர் சற்று வெறுப்புடன் கூறினர். உடனே அந்த விகார ரூபக் கிழவன்; ஆம்- ஐயப்பன்—கிழவரைப் பார்த்து ஒரு சிரிப்பை வெளியிட்டான். அந்த சிரிப்பிலே வரட்டுத்தனம் பளிச்சிட்டதே தவிரவேறெந்த அர்த்தமும் காணப்படவில்லை.

மூட்டையடியில் முடங்கிக் கொண்டிருந்த கிழவரை நோக்கி வந்தபடியே ஐயப்பன், "ஓய் வேதாந்தி! என்ன கூச்சல் போடுறே? என்னய்யா சேதி? ஆங்?"

என்று குறும்பாகக் கேட்பதாக நினைத்துக் கொண்டு அசட்டுத்தனமாகக் கத்தினன்.

"வேதாந்தியல்லப்பா என் பெயர்! மாயாண்டி.........என் பெயர்."

"கிழக் குறும்பு மட்டும் உமக்கு விடாதய்யா!" என்று சிரித்தபடி அருகே ஒரு மூட்டையில் அமர்ந்தான் ஐயப்பன்.

"நீ நல்ல வாலிபன் என்பது உனது நினைப்பு போலிருக்கிறது" என மெதுவாகச் சொல்லிக்கொண்டு, கிழவர் அசதியை உதறிக் கொண்டார். சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"இப்போதே இப்படி தவிக்கிறீரே அய்யா!—பாக்கி தூரம் எப்படிப் போய்ச் சேருகிறது. செத்துடுவீரா வழியிலேயே?"

ஐயப்பனின் இந்தக் கிண்டலிலே—கிழவனின் சிந்தனை சிறிது நேரம் மிதந்தது.

"செத்து விட்டால் என்ன; நல்லதுதான்! கடலில் செத்தால் மீன்களுக்காவது இந்த உடல் ஆகாரமாகக் கிடைக்கும்—"

"கடல் மீன் எல்லாம்—ஆகாரமில்லாமல் தவிக்குது! இவருதான் உடலைத் தருமம் பண்ணப் போறாராம்! மீனு உன் பிணத்தை எப்படி அய்யா சாப்பிடும்? மீனுகளுக்கு எலும்பு கடிக்கத் தெரியாதே; நாய் மாதிரி" [மாயாண்டி சிரித்துக் கொண்டார்.]

"உன் உடம்பிலே ஒட்டிக் கொண்டிருக்கிற சதைத் திமிரிலே இப்படிப் பேசுகிறாய் கிழவா நீ! எலும்பு மனிதனா நான்? இருக்கட்டும்! இருக்கட்டும்! இந்த எலும்பின் மதிப்பு உனக்குத் தெரியாது!"

"யானைத் தந்தமாக்கும்; இறந்தாலும் ஆயிரம் பொன் பெற!"

"ஆயிரமென்ன; இந்த எலும்புமட்டும் சாகும்போது ஒழுங்காகச் செத்தால் எத்தனையோ லட்சம் பசும் பொன் பெறும்!"

"ஒழுங்காகச் சாவதென்றால் என்னய்யா?" மாயாண்டிக் கிழவர் பேச்சை வேறு பக்கம் திருப்பிவிட முயன்றார்.

"அதாவது ஐயப்பா! கஷ்டப்படாமல் சாகவேண்டும் நிம்மதியாக—என்கிறேன்"

"உம்—அப்பேற்பட்ட மகான் ரமணரிஷிக்கே புத்து நோய் வந்து கஷ்டப்பட்டு செத்தாரு! நீயும் நானும் எப்படி சாகப் போகிறோமோ? ஆமாம்—மாயாண்டி! அப்படியே கஷ்டப்படாம சாகிறதா வச்சுக்க; அதுக்கும் லட்சக்கணக்கான பசும் பொன்னுக்கும் என்ன சம்பந்தம்?"

"சும்மா—விளையாட்டுக்குச் சொன்னேன். நான் தான் ஒரு பைத்தியக்காரன் என்று அடிக்கடி சொல்வாயே—"

"ஓய் ஓய்! பெரியமனுஷா! பொய்! பொய்! ஜாக்ரதை—உண்மையைச் சொல்லிவிடும்- இல்லே—கடல்!— ஞாபகம் வைத்துக் கொள்ளும்—!"

"ஏ ஏ! என்ன செய்வாய்?"

"படகோட கவிழ்த்துவிடுவேன் ஆளை! ஆமாம்! கேள்விப்பட்டிருப்பீரே; இந்த எடத்திலே தானே—மருங்கப் பள்ளத்து கொல்லர் குடும்பத்தையே கடல்லே கவிழ்த்தாங்களாம்!"

"அட! அதுகூட தெரியுமா உனக்கு! நீதான் பாத்தியா?"

"நான் எப்படி பார்க்க முடியும்—நான் என்ன தசரத மகாராஜனா? அறுபதாயிரம் வருஷம் உயிரோட இருந்து அறுநூறு தலைமுறைக் கதையை நேரிலே பார்க்க? மருங்கப் பள்ளத்து கொல்லர் கதை நடந்தே ஐநூறு வருஷம் இருக்கும் என்று சொல்றாங்க!"

"ஆமாம்—ஆமாம்! அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன்"

"ஏன்—மாயாண்டி! மருங்கப் பள்ளத்து புதையலைப் பற்றிப் பலரும் பலவிதமாச் சொல்றாங்களே—உண்மை தான் என்ன?"

"உண்மை என்ன இருக்கு?
கடல் நீல நிறமா இருக்கிறது
உண்மை—அந்த உண்மையை
வைத்துக்கொண்டு அதற்கு
பல புனை கதைகளை உண்டு
பண்ணுகிறார்கள்! சூரிய சந்திர
கிரகணங்கள் உண்டாவது
உண்மை! அந்த உண்மையை
அடிப்படையாக வைத்து
அதற்குப் பல புராணக்கதை
கள் எழுதியிருக்கிறார்கள்
இலங்கைக்கும், இந்தியாவுக்
கும் இடையிலே மலைப்பாறை
கள் தொடர்ச்சியாக இருப்பது
உண்மை. அந்த உண்மையை
மூலமாக வைத்து, வானரங்
கள் கட்டிய பாலமென்று
கதை கட்டுகிறார்கள்! காக்கை
ஒரு கண்ணால் பார்ப்பது
உண்மை! அந்த உண்மை
யென்னும் திரையிலே கற்பனை
வர்ணத்தைக் குழைத்து, தெ
வீக தூரிகை கொண்டு—இ
திரன் மகன் சயந்தன் காக்கை
உருவமெடுத்து, சீதையி
அங்கத்தை சுவைத்துப் பார்
தான்; அதனால் கோப
கொண்ட ராமர், அருகம் புல்
அம்பாக்கி — சயந்தனின் க
ணைக் குத்தினர்—அது மு
காக்கை குலத்திற்கே ஒரு க
இல்லை என்று புனைந்து
ஓவியம் தீட்டி விட்டார்கள்!

அணிலின் முதுகிலே வெ
துப்போன வானவில்லைப்போ
கோடுகள் இருக்கின்றன எ
பது உண்மை!

அந்த உண்மைக்கு உரை
வந்த விளக்கம்தான்; ரா
அணிலைத் தடவிக்கொ
போது விழுந்த விரலின் அ
யாளங்கள் என்ற கட்டுக்
அனுமார்களோடு சேர்
கொண்டு அணிலும் ப
கட்டியதாம்—அதனால் அ

ராமர் பாராட்டினாராம்! இப்படியெல்லாம்; கண்ணுக்குத் தெரிந்த உண்மைகளை வைத்துக் கொண்டும்—கண்ணுக்குத் தெரியாத கற்பனைகளை வைத்துக்கொண்டும்—யூகங்களை அடிப்படையாக அமைத்துக் கொண்டும்—எழுந்த கதைகள் ஏராளம்! ஏராளம்! அதிலும் கேட்பதற்கு உன்னைப்போல ஏமாளிகள் இருந்தால் பிறகு சொல்லவா வேண்டும் — ஏமாற்றுகிறவனுக்கு வேட்டைதான்!"

"அப்படின்னா—கதை சொல்றவன் எல்லாம்—ஏமாத்துறவனா?"

"எல்லோரும் அல்ல; கதைக்காக கதை சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஏமாற்றுவதற்காகவே கதை சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்—ஆனால், மருங்கப்பள்ளத்துக் கதையிருக்கிறதே; அதை நம்பி பலர் ஏமாந்திருக்கலாமே தவிர, ஏமாற்ற வேண்டுமென்பதற்காக யாரும் இயற்றிய கதையாக இருக்க முடியாது! ஆழ்ந்து பார்க்கப் போனால், அப்படி ஒரு கதை நடந்திருக்கலாம் என்றும் நம்ப இடமிருக்கிறது!"

"மாயாண்டி!......அந்தக் கதையைச் சொல்லுமே இப்போது-நானும் பலரிடம் கேட்டிருக்கேன் அந்தக் கதையை—உமது வாயாலும்கேட்கிறேன்"

"என் வாயால் கேட்க முடியாது! உன் காதாலேயே கேளப்பா!"

ஐயப்பன் அசட்டுத்தனமாக சிரித்துவிட்டு பக்கத்திலிருந்த மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து ஒரு வெங்காயத்தை எடுத்துக்கடித்துக்கொண்டான்

"எல்லா மூட்டைகளும், வெங்காயம்தானா ?" என்று கேட்டார் கிழவர்.

"ஆமாம்-கதையைச் சொல்லும் அய்யா!" என்று சலித்துக்கொண்டான்—ஐயப்பன்.

"சொல்கிறேன்—உம் !...... வெங்காயத்துக்கு பதில் என்ன கொண்டு வரப் போகிறீர்கள்?"

"வெங்காயத்துக்கு பண்டமாத்து—தேங்காய் எண்ணெ கொண்டு வருவோம்! ஓய், கிழவா! பேச்சை மாத்தாமல் கதையைச் சொல்லும்!"

"சொல்லுகிறேன்" என்று கனைத்துக் கொண்டார் மாயாண்டி!

"டே! பசங்களா! எல்லாரும் ஒழுங்கா கவனிச்சுப் போங்க—கவிழ்த்து விட்டுடாதிங்க!" என்று ஆட்களை ஒரு முறை அதட்டிவிட்டு, ஐயப்பன் கதை கேட்கத் தயாரானான். கிழவரும் ஆரம்பித்தார்.

° ° °

நானூறு ஐநூறு வருடங்களுக்கு முன்பு, மருங்கப் பள்ளம் பிரதேசம் எல்லாம் காட்டுப் பகுதியாகவே இருக்குமாம். ஒரு ஆட்டிடையர், காட்டுப் பகுதியிலே தன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு சென்று வழக்கமாக தழை வெட்டிப்போடுவாராம். ஒருநாள் மரத்திலேறி ஆடுகளுக்கு தழை வெட்டிப் போடும்போது அவரது அரிவாள் கூர் மழுங்கியிருந்ததை உணர்ந்தார். கிளைகளையோ, தழைகளையோ சுலபமாக வெட்ட முடியாதபடி மழுங்கியிருந்ததால், அந்த அரிவாளை நன்கு கூராக்கிக் கொள்வதற்காக, மரத்தடியில் கிடந்த ஒரு கல்லில் தீட்டினார். தீட்டத் தீட்ட அரிவாள், கூர்மை பெறுவதற்குப் பதிலாக மழுங்கிக்கொண்டே வந்ததாம். இடையருக்கு ஒன்றும் புரியவில்லை. அரிவாளை எடுத்துக் கொண்டு அந்த ஊரிலே உள்ள



கொல்லர் வீட்டுக்குப் போனார். "தீட்டத் தீட்ட கூர் மழுங்குகிறது இந்த அரிவாள்!" என்று சங்கடப் பட்டுக்கொண்டார்!

"ஆமாம்—சிலருக்கு படிக்கப் படிக்க புத்தி மழுங்குவதுண்டு" என்று அந்தக் கொல்லர் பதில் சொன்னாரோ என்னமோ தெரியாது. அரிவாளை வாங்கி, உலையில் வைத்து பழுக்கக் காய்ச்ச ஆரம்பித்தார். காய்ச்சும் பொழுது, அரிவாளின் ஓரமெல்லாம் தங்க நிறமாக காட்சி யளிப்பதைக் கண்டார். அரிவாளில் தங்கம் ஏறியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார், அந்த யூகமுள்ள கொல்லர்! ஆகவே தந்திரமாக இடையரை மறுநாள் வரும்படி சொல்லி அனுப்பிவிட்டார். இடையர் போனதும், அரிவாளை பக்குவமாகக் காய்ச்சிடவே அது முழுவதும் தங்கமாக மாறிவிட்டது. கொல்லருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அதை எடுத்து ஒளித்து வைத்துவிட்டு, வேறு ஒரு அரிவாள் அதேபோல செய்து, மறுநாள் வந்த இடையரிடம் கொடுத்தார். இடையரும் அதை சந்தோஷமாக வாங்கிக் கொண்டார். சந்தோஷத்தில் இருக்கும் இடையரிடம், கொல்லர் மெதுவாகப் பேச்சைஆரம்பித்து,நேற்றைய தினம் இடையர் எந்தக் கல்லில் அரிவாளைத் தீட்டினார் என்பதைக் கேட்டார்.

இடையரும், கொல்லருக்கு அந்தக் கல்லைக் காட்டுவதாக அழைத்துப்போனார்.கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தேடி அந்தக் கல்லையும் அவருக்குக் காட்டினார். கொல்லர் அந்தக் கல்லை, அலட்சியமாகப் பார்த்து விட்டு வீடு திரும்பினார். திரும்பியவருக்கு வீட்டிலே இருப்பு கொள்ளவில்லை. அன்றிரவே அந்தக் காட்டுப் பகுதிக்குள் நுழைந்து இடையர் காட்டிய அந்தக் கல்லை யாருக்கும் தெரியாமல் தன்வீட்டுக்குள்ளே கொண்டு வந்து சேர்த்தார்.

மறு நாள் காலையிலிருந்து கொல்லருக்கு இரும்பு பொறுக்கும் வேலைதான்! பொறுக்கிய இரும்புகளை அந்தக் கல்லிலே வைத்துத் தேய்ப்பதும்-பிறகு அவைகளைப் பழுக்கக்காய்ச்சிப் பசும் பொன் ஆக்குவதும் அவரது அன்றாடத் தொழிலாகி விட்டது. இப்படியாக லட்சக் கணக்கிலே பொன்னைக் குவிக்க ஆரம்பித்தார். கொல்லருக்குப் பொன் குவியும் ரகசியம் யாருக்கும் தெரியவில்லை. பொன்செய்யும் கொல்லருக்கு, அழகிய பெண்ணொன்றும் உண்டு. ஐஸ்வரியச் சீமானாக கொல்லர் மாறியதும் அவர், தனது மகளை காரை வேளாளர் என்னும் உயர் ஜாதியில் திருமணம் செய்து கொடுத்துஅந்தவகுப்போடுசம்பந்தம்வைத்துக் கொள்ள விரும்பினார். காரை வேளாளர்களுக்கு, கொல்லரிடமிருந்து பொன்னை வசப்படுத்த வேண்டுமென்பதில் ஆசைதான். ஆனால், அதற்காக அவரது பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை வெறுத்தார்கள். வெறுப்பு விபரீத எண்ணத்திற்கு வித்திடலாயிற்று. கொல்லரை எப்படியாவது சதி செய்து கொன்றுவிட்டு, அவரிடமுள்ள பொன் குவியல்களையும்கைப்பற்றிவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். உயர்ந்த ஜாதிக்காரர்களாகிய தம்மிடம், சாதாரணமான ஒரு கொல்லர்—சம்பந்தம்வைத்துக் கொள்ள எண்ணியது மகா பாபம்—பெரிய குறும்புத்தனம் -என்றெல்லாம் அந்த வேளாளர் மரபினர் ஆத்திரப்பட்டுத் துடித்தனர். எப்படியோ சதி உருவாகிவிட்டது. கொல்லரிடம் சென்று, அவரது பெண்ணை தங்கள் மணமகனுக்குத் திருமணம் செய்ய சம்மதமென்றும், ஆனால்—தங்கள் ஜாதி வழக்கப்படி—கடலிலே தான் திருமணம்நடக்கவேண்டுமென்றும் கூறினார்கள். சதியை உணராத அந்தக் கொல்லரும் அதற்கு சம்மதித்தார். இரண்டு மூன்று படகுகளில் மாப்பிள்ளை வீட்டாரும், பெண்வீட்டாரும் புறப்பட்டனர். ஒரு படகில் கொல்லர்—அவர் பெற்ற பைங்கொடி—அவரது மகன்—இன்னும் சில உறவினர்கள்; மற்றொரு படகில், மாப்பிள்ளை, அவரது வீட்டார்; இன்னொரு படகில் சதித்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்கள். இப்படி மூன்றுபடகுகளும், கடலிலே பிரயாணம் நடத்துகின்றன. ஜாதிஆசாரப்படி கடலிலே திருமணம் நடக்கப்போகிறதுஎனஎண்ணியிருக்கிறார்கள் பெண் வீட்டார்கள். படகுகள் மூன்றும் நின்றன. வேளாளர் வீட்டார் ஒருவ[illegible] உரத்த குரலில் [illegible]

"உம்! கல்யாணத்தை ஆரம்பிக்கலாம்!" என்று!

அவர் சொல்லி வாய் மூடுவதற்குள், மூன்றாவது படகில் இருந்தவர்கள் பெண் வீட்டாரின் படகில் பாய்ந்து குதித்து அந்தப் படகை அப்படியே கடலில் கவிழ்த்து விட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! எதிர் காலத்தை எண்ணி ஆனந்தப் பட்டிருந்த அந்த அழகியும், அவள் அப்பனும், அண்ணனும் ஆழ்கடலில் மிதந்து விட்டார்கள்—மணக்கோலம் காண வந்தவர்கள் பிணக்கோலம் பெற்றனர். சதிவேலையை வெற்றிகரமாக முடித்து விட்ட வேளாளப் பெருமக்கள், மருங்கப்பள்ளம் திரும்பி வந்து, கொல்லருடைய வீட்டை சோதனை போட்டார்கள். பொன் குவியல்களை அபகரிக்க துடித்து நின்றார்கள்! ஆனால் ஒரு சிறுதுண்டுகூட கிடைக்கவில்லை. கொல்லர், முன் ஜாக்கிரதையாகவே; அவைகளை எல்லாம் தனக்கு மட்டும் தெரிந்த இடத்திலே புதைத்து விட்டார். பொன்னை மட்டுமல்ல! பொன்செய்யும் அந்தக் கல்லையும் புதைத்துவிட்டார். குளிசக் கல் என்று கூறுகிறார்களே; அந்தக் கல்லுக்கு இடப்பட்ட பெயர்தான் அது! கொல்லர் குடும்பத்தை அழித்து விட்டு, பொன்னும் கிடைக்காமல் ஏமாந்த காரணத்தால், அந்த முயற்சியில் ஈடுபட்ட வேளாளர்கள் இலங்கையில், யாழ்ப்பாணத்திலிருக்கும், காரை என்னும் தீவில் போய் குடியேறிவிட்டார்கள்"

கிழவர் கதையைச் சொல்லி முடித்து விட்டு, "இப்படிக் கதை சொல்கிறார்கள்; என்றார்"

"ஆமாம்— அந்தக் கல்லைப் பற்றிக்கூட எந்தத் தகவலும் கிடைக்காதா?" என்று ஆவலோடு கேட்டான் ஐயப்பன்.

"ஏன்; கிடைத்தால் நீ எடுத்து, பொன்னுருக்கலாம் என்று பார்க்கிறாயா?"

"கதைமட்டும் நிஜமா இருந்து, அந்த பொன்னெல்லாம் எனக்கிட்ட கிடைச்சா; ஆகா!"

"என்ன செய்வே; சிதம்பரம் நடராசருக்குப் போட்டது மாதிரி; திருவாரூர் தியாகராசருக்கு தங்க ஓடு போடுவாயாக்கும்?"

"தங்க ஓடா?சேச்சே! போடமாட்டேன்! தங்கத் தேரே செய்து வைப்பேன்!"

"நல்ல வேளை! ஏ—ஏராளமான பொன் குவியல்களே! இதுமாதிரி புத்திசாலிகள் இருக்கும் வரையில் நீங்கள் யார் கண்ணிலும் அகப்பட வேண்டாம்!"

கிழவர், ஆகாயத்தை நோக்கி இப்படிப் பிரார்த்தனை செய்தார். பிறகு, ஐயப்பனைப் பார்த்து, "ஆனால் ஒன்று ஐயப்பா!—அந்தக் கொல்லர், கடலிலே கவிழும்போது—தன் மடியிலே ஒரு சிறு கல்லும், புதைத்து வைத்த பொன் இருக்கும் இடத்தைப் பற்றிய [illegible]றிப்பும் வைத்திருந்தாராம். ந[illegible]ிய செப்பு ஏட்டிலே அந்த [illegible]ப்பு இருந்ததாம். அந்தச்

[12ம் பக்கம்]

புரட்சிக் கவிதை...

★

[கவிஞர் சுரதா—புரட்சிக்கவி பாரதிதாசனின் நேர் பரம்பரை என்பதை இந்தக் கவிதை வரிகளின் மூலம் கம்பீரமாகக் கூறிக்கொள்கிறார். ஔவை பாடிய ஆத்திசூடி, அனைவரும் அறிந்ததொன்று அதை எப்படித் திருப்பி — எவ்வண்ணம் புதுமையும் புரட்சியும் செய்கிறார் என்பதை நூறு முறை படித்தாலும் தெவிட்டவில்லை.] (ஆ—ர்)

அடுக்கடுக்காய் சிலரிடம் போய் செல்வம் சேர
அதை இழந்த பலமக்கள் ஏழை யாகித்
துடிக்கின்றார் புழுப்போல. பிச்சைக் காரர்
தினந்தோறும் பெருகுகின்றார். இதை உணர்ந்தும்,
தடுத்து அதை மாற்றாமல்; இரப்போ ருக்குத்
தர்மத்தைச் செய்துவரின், எந்த நாடும்
அடையாது பொது உடைமை. ஆகை யாலே,
அறஞ்செய்ய விரும்பாதே முன்னோர் போல.

நீக்கமற நிறைந்துள்ள கடவு ளுக்கு,
நிறமில்லை, வடிவில்லை என்றால்; தச்சன்
ஆக்கிதரும் மரப்பதுமை மட்டும், தெய்வம்
ஆய்விடுமா சொல்லுங்கள்? என்று, பக்தர்
மூக்குதனை உடைக்கின்ற கேள்வி கேட்டு
விரட்டாமல், தோள்மீது வாக னத்தைத்
தூக்கிவினை செய்யாதே. செய்தால் இந்த
தேசத்தில் உன்னைப்போல் முட்டாள் இல்லை.

வாடுகின்ற ஏழைமக்கள்; ஒடெடுப் போர்;
மான்விழிபோல் சாளரங்கள் அமைந்த, மாடி;
வீடுகளில் வசிப்பவர்கள்; உயர்வு; தாழ்வு;
வேண்டாத வேற்றுமைகள்; இதனைப் போன்ற
மேடுபள்ள மனப்பான்மை யோடு, இந்த
மேதினியை ஓர் தெய்வம் படைத் திருந்தால்;
மூடர்களை அறிவுள்ளோர் வெறுத்தல் போல
மதியற்ற **தெய்வமிகழ்**. கும்பி டாதே!

மார்தட்டி, கூர்மீசை திருகி, ரத்த
வாளெடுத்து, "அந்தணரி"ன் தலை எடுத்துப்
பார்த்திட்ட தென்னாட்டான். இனத்தைக் காக்கப்
போரிட்டோன். புவிப்பெரியோன். இரணியன் தன்னை,
ஆரியர்கள் கூறுதல் போல் "அரக்கன்" என்று
இழித்துரைக்கும் தமிழ்மகனைப் பார்த்தால், பூணூல்
"பார்ப்பானின் கையேடே!" என்று கூவு.
பளிச்சென்று **சுளிக்கச்சொல்**. பயப் படாதே.

நீர்மீது கொட்டிவிட்ட உப்பு போல
நம்தமிழர் வரலாற்றை அழித்த, ஆதிப்
பார்ப்பனரின் சாத்திரங்கள்; அதனை நம்பிப்
பாடிவைத்த நம்புலவர் பாடல், யாவும்,
வேர்வையைப்போல் பயனற்ற தண்ணீர். இந்த
விளக்கத்தை மறுப்பவர்கள், முன்னோர் கண்ட
சீர்திருத்தம் கொல்பவர்கள். அவரை எல்லாம்
துன்பத்திற்கிடங்கொடுத்துத் திருத்தவேண்டும்.

கோடையிலே பாடுகின்ற குயிலே! கண்கள்
கொத்தி இங்கு அழைத்துவந்த அழகே! சங்க
ஏடுதரும் பாடல்களின் சுவையே! அந்தி
இளங்காற்றே! எனப்புகழ்ந்து, பிறகு முத்தம்,
ஆடுகின்ற தருணத்தில்; உடலில் உள்ள
அணு அணுத்தும் பூரித்து மயங்க, இன்பம்
தேடுகின்ற நடு இரவில்; இனிக்க வைக்கும்
தையல்சொல் கேட்பதுபோல், போதை இல்லை!



குறளோவியம்

❋

வெள்ளிமணல் படுக்கையிலே அந்தப் புள்ளிமயில் படுத்திருந்தாள். அந்த சயனத்துச்சாயலை தூர இருந்து காண்கிறான் அவன். அந்த அழகுமிழும் காட்சியால் உள்ளத்தில் வெல்லப்பாகு தடவிட அவன் கண்களை வாழ்த்துகிறான். பாராட்டுகிறான்.

குளிர் மொண்டுவரும் தென்றலிலே கத கதப்பு உணர்ச்சி கலந்து வருவதாக அறிகிறான். சிறிது நேரம் சிலையானான். உணர்வு வந்து அசைந்தான். அப்போது அந்த நிலாப்பதுமைக் காணவில்லை. அவள் போய்விட்டாள்.

அவன் நெஞ்சு துடித்துக் கனத்து விட்டது. ஐயோ! ஏன் இந்த அழகியைப் பார்த்தோம், பார்க்காமலிருந் திருந்தால் இப்படிப் பதைக்க வேண்டிய அவசியமே வந்திருக்காதே என்று புலம்பினான்.

வேதனையை உண்டாக்கிய தன் கண்களை வசை பொழிந்து கண்டித்தான். வீடு சென்றான். தூக்கம் வரவில்லை. அவளை நினைத்து நினைத்து அழுதான். அப்போது அவனுக்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டது.

"சும்மா இருந்த என்னை சுந்தரியின் நினைவால் வாடச் செய்யும் நோயை உண்டாக்கிய ஏ! கண்களே — நீங்கள் தூக்கம் வராமல் அழுகிறீர்களே......அது எனக்கு மிக மகிழ்ச்சி! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் தண்டனையை நன்றாக அனுபவியுங்கள்!" என்று முணுமுணுத்தான் அந்த முணுமுணுப்பை முத்தமிழ் வள்ளல் குறளார் எப்படி இரு வரிகளில் அமைத்திருக்கிறார் படியுங்கள்!

"ஓ ஓ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டா அ மிதற்பட்டது."

கருணை

காட்டுப்பூனை...

[5-ம் பக்க தொடர்ச்சி]

லையை கொஞ்சம் எடுத்துக் கொண்டு, தோலுறிப்பதற்கான ஆயத்தங்களுடன் கிளம்பிக் கொண்டிருந்தான்.

"காட்டுப்பூனை, உன்னை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். கோடிவீட்டுக்காரன் மாட்டின் தோலை உறித்துவிட்டால், அவனும் தலையாரியைப் போல வாழ்நாள் முழுவதும் அழுது கொண்டே இருப்பான். நமக்கு வேண்டாமப்பா இந்த பிழைப்பு! ..."பெருச்சாளியின் இந்தப் பேச்சிலே வழக்கமான கம்பீரமில்லை. சாகப்போகிறவன் பேசுவதைப்போல அவன் பேசினான்.

"பெருச்சாளி, கோடி வீட்டுக்காரனுக்காக நீ இவ்வளவு இரக்கப்படுகிறாயே, அவனிடம் போய் ஒருவேளை சாப்பாடு போடச் சொல்லு, பார்ப்போம். கட்டிவைத்து அடித்து அவன் உன்தோலை உறித்து விடுவான். ஜாக்ரதை! கொஞ்ச நாட்களாகவே நீ ரொம்ப கெட்டு விட்டாய், பெருச்சாளி!"

"ஆமாம், காட்டுப்பூனை. நான் ரொம்பவும் கெட்டு விட்டேன். மனிதன் சாகப்போகும் போது தான், அதுவரை சவமாக் கெடந்த மனச்சாட்சிக்கு உசிரு வருது" என்று ஈனஸ்வரத்தில் பெருச்சாளி என்னென்னமோ புலம்பினான். அதற்கு மேல் பேச முடியவில்லை. போக வேண்டாமென்று கைகளைக் காட்டினான். காட்டுப்பூனை இவைகளை யெல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. பச்சிலையில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு கிராமத்துப் பக்கம் காட்டுப்பூனை நடையை முடுக்கினான்.

பெருச்சாளிக்கு ஒன்றுமே புரியவில்லை. இருமினான்; ஒரு படி இருக்கும், இரத்தம் வெளி வந்தது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்ததைப்போல பெருச்சாளி சாக்கு மூட்டையைத் தோளிலே போட்டுக் கொண்டான் தள்ளாடியபடி. நடந்தான்.

"கோடிக்கரை போலீஸ் ஸ்டேஷன்" என்ற போர்டு காற்றிலே அசைந்து கொண்டிருந்தது. பெருச்சாளிதள்ளாடித் தள்ளாடி படிக்களைக் கடந்தான். சாக்கு மூட்டையை சப் இன்ஸ்பெக்டருக்கு முன்னே தூக்கி எறிந்தான். பிள்ளையார் கவசம் 'கணீ'ரென்ற சப்தத்தோடுகீழே விழுந்தது. இன்ஸ்பெக்டர் ஆச்சரியக் கடலில் மூழ்கினார். பெருச்சாளி கீழே சாய்ந்தான். அவன் வாய் முணு முணுத்தது.

மனிதன் சாகப் போகும்போது
தான், அதுவரை சவமாக்
கெடந்தஅவன் மனச்சாட்சிக்கு
உசுரு வருது.........அதற்கு

மேல்அவனால் பேசமுடியவில்லை.

போலீஸ் ஸ்டேஷனில் ஊரே கூடி விட்டது. பெருச்சாளியை ஒரு மரத்திலே கட்டி வைத்திருந்தார்கள். போலீஸ்காரர் ஒருவர் சவுக்கினால்பெருச்சாளியைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தார். "உண்மையைச் சொல்; உன் கூட்டாளி எங்கே?"—இது தான் கேள்வி. பதில் வரவில்லை. சாட்டையின் நுனி பெருச்சாளியின்முதுகிலேநர்த்தனமாடியது.

பெருச்சாளிக்கு அந்த சவுக்கடி வலிக்கவே இல்லை. மாட்டுக்குத் தோலுறிக்க, காட்டுப் பூனை அரைத்து வைத்திருந்த பச்சிலையைத்தான் அவன்முன்னமேயே வயிறு நிறம்பும் அளவுக்கு தின்று விட்டானே!

பயம் கொள்ளாதே, பாப்பா!

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"பரீட்சைக்குக் கூட நான் பயப்பட மாட்டேன். ஆனால் அப்பாவும் அம்மாவும் 'பேய், பூதம்' என்று சொல்லி ரொம்பவும் பயமுறுத்துகிறார்கள்! அது பற்றி உங்கள் எண்ண மென்ன?"— இப்படிக் கேட்டிருக்கிறது மங்கநல்லூரிலிருந்து பாத்த முத்து என்ற தங்கை.

நான் என்ன சொல்வது? பேயாவது; பூதமாவது? எல்லாம் வாய் வீச்சு! வெறும் பேச்சு! முட்டாள் தனமான — முடத்தனமான நம்பிக்கைகள்! இதை நம்பி மோசம் போனவர்கள் அநேகர். அந்த 'மோசத்'தை விளக்கும் கதை ஒன்றைப் பதிலாகத் தருகிறேன், படியுங்கள்.

ஃ ஃ ஃ

'சேதி தெரியுமா? ஊரிலே புலி நடமாடுகிறதே!'—'ஐயையோ! மீண்டும் புயல் வீசப் போகிறதாமே!'—'ஹைடரஜன் குண்டு முதலில் நம் தலையில் தான் விழப் போகிறதாம்'— இப்படி எல்லாம் திடுக்கிடும் செய்திகளைச் சொன்னால்கூட அந்த ஊர் மக்கள் பயப்பட மாட்டார்கள்; 'பூ, இதுதானா?. என்று கேலியும் செய்வார்கள்.

ஆனால், புன்னை மரத்துப் பேயைப்பற்றி பேச்சு எடுத்தாலோ......அவர்கள் 'கப்சிப்' தான். ஒரே நடுக்கம்! பெரும் பயம்!

ஊர்க் கோடியிலே ஒரு சுடுகாடு; பயங்கரச் சுடுகாடு. அங்கே ஒரு புன்னை மரம்; மிகப் பெரிய மரம். அதிலேதான் இருந்தது அந்தப் பேய்!

பெருத்த உடல்; கருத்த உருவம்; அச்ச மூட்டும் குரல்; சலங்கை சப்தம்—இதுதான் பேயாம். இப்படிக் கதையாகச் சொன்னார்கள் 'அதைக் கண்டேன்' என்றவர்கள்.

ஊரைச் சுற்றி ஓயாத பயத்தை உண்டு பண்ணிவிட்ட அந்தப் பேயைப்பற்றி ஒரு நாள் ராசனுக்கும் ராணிக்கும் சண்டை வந்து விட்டது. இருவரும் பள்ளி நண்பர்கள். படுசுட்டிகள்! ஒரே வித்தியாசம்; ராணி பயந்தவள். ராசன் பயப்பட வைப்பவன்.

"புன்னை மரத்தில் பேய் இருப்பது உண்மையே!"-.இது ராணியின் வாதம்.

"இல்லை! புன்னை மரத்தில் இலையும் கிளையும்தான் இருக்கிறது. பேயாவது நோயாவது!" -இது ராசனின் கிண்டல்.

விளையாட்டு வாதம் முற்றியது. பந்தயம் என்ற முடிவில் நின்றது. இரவு ஒரு மணிக்கு ராசன் சுடுகாட்டுக்குப் போக வேண்டும்; புன்னை மரத்தில் அடையாளம் ஒன்றை செதுக்க வேண்டும்—இதுதான் பயங்கொள்ளி ராணி ராசனுக்கு இட்ட பந்தயம். ராசன் தயாரானன்.

ஃ ஃ ஃ

நள்ளிரவு. ஒரு மணி. ஒரே இருட்டு. பயமூட்டும் கும்மிருட்டு.

அந்த நட்ட நடு நிசியிலே சுடுகாட்டில் நடந்து கொண்டிருந்தான் ராசன். இருட்டு அவனுக்கு பயத்தைத்தான் கொடுத்தது. இருந்தாலும் பந்தயமல்லவா, படபடக்கும் மார்பை கையால் அழுத்திக் கொண்டான். புன்னை மரத்தை நெருங்கிவிட்டான். பையிலிருந்த கத்தியை எடுத்தான். மரத்தில் தன் பெயரையே அடையாளமாக செதுக்க ஆரம்பித்தான்.

திடீரென ஏதோ சலசலப்பு சப்தம் கேட்டது. ராசன் திடுக்கிட்டான்; திகைத்தான். 'குப்' பென்று வியர்த்தது உடல். உடனே சுற்று முற்றும் உற்றுப் பார்த்தான்.

மறுகணம் 'ஐயோ' என்று அலறினன். ஏன்?......கொஞ்ச தூரத்திலே, இருளோடு இருளாக...ஒரு கரிய உருவம்...மையிருட்டிலேயும் கண்ணுக்குத் தெரிந்த பெரிய உருவம் புன்னை மரத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தது.

"ஐயையோ! பேய்!" என்று கத்தினன் ராசன். ஓட்டம் பிடித்தான். திரும்பிப் பார்த்தான். 'ஜல், ஜல்' என்ற சலங்கைசப்தம் ஒலிக்க, அந்தப் பாழும் பேய் அவனுக்கு மிக அருகில் ஓடிவந்து கொண்டிருந்தது.

ராசனின் கையிலிருந்த கத்தி நழுவி கீழே விழுந்தது. கொஞ்ச தூரம் ஓடினன்.

(அடுத்த பக்கம்)

முத்துவும் செல்வியும்!

3. படம் உடைந்தது!

நாலு போலீஸ்காரர்கள்—நடுவிலே ஒரு பெரிய பையன்; ஒரு பெண் — தெருவில் இப்படிப் போய்க் கொண்டிருந்தது 'வாத்யமில்லாத' ஊர்வலம் ஒன்று.

"என்ன மாமா இது? அந்த ஆளையும் பெண்ணையும் ஏன் போலீசிலே பிடிச்சுக் கிட்டுப் போறாங்க?" — இப்படிக் கேட்டான் முத்து, ரொம்பவும் அக்கரையாக, பக்கத்திலிருந்த மூர்த்தி மாமாவிடம்.

"அதுவா? அந்தப் பையன் வந்து, அந்தப் பெண்ணை, அவளோட அப்பா அம்மாவுக்குத் தெரியாமெ அழைச்சுக் கிட்டு ஓடிட்டானும். அதனாலேதான் போலீசிலே பிடிச்சுட்டாங்க..." —மாமா விளக்கம் கொடுத்தார்.

"அவனை என்ன செய்வாங்க?" — முத்து மீண்டும் கிண்டினன்.

"என்ன செய்வாங்களா? இது என்ன கேள்வி; ஜெயில்லே தள்ளுவாங்க..." என்றார் மாமா.

"அப்படியா?..." என்று முத்து இழுத்தான். அதற்குள் 'படீர், படீர்' என்ற சப்தம் வீட்டிற்குள்ளிருந்து கிளம்பியது. பதறிப்போய் ஓடினர் மாமா. அங்கே!...சுவற்றிலிருந்த பெரிய கண்ணாடிப் படத்தை, கையிலே கிடைத்த கம்பொன்றால் பதம் பார்த்துக் கொண்டிருந்தது செல்வி.

முன்கோப மூர்த்தி மாமாவுக்கு கோபம் 'குபுக்' கென்று குதித்தது. "என்ன இது, அநியாயம்!" என்று கத்தினர்.

"என்னவா? இந்தப் படம் நம் வீட்டில் இருக்கக் கூடாதே! உடனே இதைப் போலீசில் பிடித்துக் கொடுங்கள்!" என்று செல்வி சாவதானமாகச் சொல்லியது.

"போலீசிலா?"—புரியாது விழித்தார், பாவம் மாமா!

"பின்னே என்ன மாமா! நீங்கள் சொன்னதை எல்லாம் நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஒரே ஒரு பெண்ணை அழைச்சுக்கிட்டு ஓடினவனையே ஜெயில்லே போடுவாங்கோன்னு சொன்னீங்களே, அப்படின்னு இந்தப் பையனை என்ன என்ன செய்யலாம்?..." என்று சொல்லிக் கொண்டே தான் உடைத்த படத்தைக் காட்டியது செல்வி.

மாமா பார்த்தார். ஆலமரத்திலே பால கிருஷ்ணன்; கீழே ஆறு; அதிலே நிறையப் பெண்கள்; கிருஷ்ணனுக்கு ஒரே சிரிப்பு; கொண்டாட்டம் — இப்படி இருந்தது படம்.

மூர்த்தி மாமா மௌனமானர். ஆனல் 'களுக்' கென்று சிரித்துவிட்டான் பின்னல் வந்த முத்து!

ஒரு கடிதம்

அன்பார்ந்த அண்ணா,

என் அண்ணன் வாங்கும் 'முரசொலி'யில் நான் தவறாது 'பிறைவானம்' படிக்கிறேன். அது அறிவு விருந்து தருகிறது. ரொம்ப ஜோர்!......அண்ணா, ஒரு முக்கிய விஷயம்; என் அப்பாவும் அம்மாவும் என்னைக் கட்டாயப்படுத்தி கோவிலுக்குப் போகச் சொல்கிறார்கள் அண்ணனே அது தவறு என்கிறார்......நான் என்ன செய்து தொலைக்க?

எஸ். பிரணவமூர்த்தி
பரமக்குடி

அன்புத் தம்பி!

உருவற்றவர் கடவுள். அவர் 'அன்பா'க இருக்கலாம்; 'மனசாட்சி' யாக இருக்கலாம்; 'உள்ளத் தூய்மை'யாகஇருக்கலாம்; 'அவரைகோவிலில்சென்றுதான் வணங்க வேண்டும் என்பது அவசியமில்லாததுதான்.

ஆனல், உன் வீட்டில் கட்டாயப் படுத்தினல் தாராளமாகப் போ, கண்காட்சிக்குப் போவது போல. ஆனல் மறந்து விடாதே; போகும் போதெல்லாம் கையோடு உன் பாடப் புத்தகம் ஒன்றையும் கொண்டுபோ. கோவிலில் பரந்த இடம் இருக்கும்; சந்தடியும்இருக்காது; நிம்மதியாகப் படித்துவிட்டு வரலாம் அல்லவா? மேலும், அப்படிப் போய் பார்த்தால், தானே அந்த கல்லாலான கடவுளின் பெயரால் பக்த கோடிகள் செய்யும்பாவங்கள் புரியும்; அக்கிரமங்கள் தெரியும்; அப்புறம் நீமற்றவர்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லை; நீயாகவே ஒரு முடிவுக்கு வந்து விடலாமல்லவா?

நிலைக் கண்ணாடிகள் நிலைத்திருக்க....

★

அவருக்கு ஆயிரம் ஏகரா நிலம் இருக்கிறது. கூனூரிலே ஒரு பங்களா உண்டு. ஊரிலுள்ள வீடுகளெல்லாம் அவருக்குத்தான் சொந்தம். ஆமாதாபாத்திலே பஞ்சாலை ஒன்றை நிறுவியிருக்கிறார். கரும்பாலை ஒன்று ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார் — இப்படித்தான் சீமான்களின் செல்வநிலை குறித்து திண்ணை விருந்திலே செவிக்குணவு வழங்கப்படும்! பங்களா வாசமும் பங்கு மார்க்கெட் வேட்டையும்தான் பணப் பெட்டியின் கனபரிமானத்தைக் காட்ட பயன்பட்டன.

சமீப காலத்திலே இந்த அளவுகோல் மாறிவிட்டது. குதிரைப் பந்தய மைதானத்திலே கும்மாளம் போட்ட தனவந்தர்களெல்லாம் இப்போது பத்திரிக்கைத் தொழிலிலே புகுந்துகொண்டார்கள். இத்தனை கார்கள்—இத்தனை ஏக்கர் கழனிகள் என்பதைப் போல . அந்த சேட்டிற்கு இத்தனை செய்தித் தாள்கள் இருக்கின்றன; அந்த குஜாராத்திக் காரனிடம் இத்தனை ஆங்கிலத்தாள்கள் உள்ளன என்கிற பேச்சு வளர்கின்ற அளவிற்கு பத்திரிகைத் தொழில்—ஏழை எழுத்தாளனைத் தவிர மற்ற மானிடவர்க்கத்தினரால்ஏறெடுத்தும் பார்க்காமலிருந்த அந்தத் தொழில் இப்போதோ பண முதலைகளின் இலாபவேட்டைக் காடாக மாறிவிட்டது. பணமும் பத்திரிக்கையும் இருந்தால் போதும்; கனம்களின் தயவு தன்னைத் தேடிவரும் என்ற நம்பிக்கையும் நம் நாட்டிலே வளர்ந்து விட்டது.

இந்திய அரசினர் நியமித்திருந்த பத்திரிக்கைக் கமிஷனின் அறிக்கையைப் பார்க்கும்போது. எழுத்துத் துறையிலே சில திமிங்கலங்கள் புகுந்துகொண்டு செய்கின்ற 'தில்லுமல்லு' வேலைகள் நம்மையெல்லாம் திகைக்க வைக்கின்றன; என்பது விளங்குகிறது. சில பெரிய புள்ளிகள் பிரஸ் டிரஸ்ட்டிலே அங்கம் வகிப்பதால் அவர்கள் சரிவர சந்தாத் தொகை செலுத்துவது கிடையாதாம். மேலும் சிலர் இண்டாந்தர வசதிக்களுக்கான தொகையைச் செலுத்திவிட்டு முதல்தர சலுகைகளைப் பெற்றுவிடுகிறார்களாம். ஒருபத்திரிக்கையின் அதிபர், தான் கொலையைத் தவிர மற்ற எல்லாகுற்றங்களையும் செய்து பத்திரிக்கை நடத்தி வருவதாக ஒப்புக்கொண்டாராம்,

நாட்டின் நிலை விளக்கும் கண்ணாடியாம் பத்திரிக்கைத் தொழில் இப்படி கண்யமிழந்து காட்சி அளிக்கிறது. நறுக்குவாளாக இருந்து சிரம் அறுக்கும் சிலந்திகளெல்லாம் இப்போது எழுத்தாளனை ஆட்டிப் படைத்து பத்திரிகைத் தொழிலிலே நீச்சல் பழகுகின்றன. இந்தப் பூநாகங்களை அழித்தொழியத்தான் சென்ற வார'சுதந்தரா' ஆங்கிலஇதழ் சில அருமையான யோசனைகளைச் சொல்லியிருக்கிறது. அதன்படி

எந்த முதலாளியும் ஒரு செய்தித் தாளுக்குமேல் நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது.

எப்படி ஒருவர் மந்திரியானதும் மற்ற வியாபாரங்களைக் கைவிடும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறாரோ, அதைப் போலவே தொழில்துறை அதிபர்களையும் பத்திரிகை நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது.

செய்தித்தாள் ஸ்தாபனங்கள் வார அல்லது மாத இதழ்கள், நடத்துவதைத் தடை செய்ய வேண்டும்.

பத்திரிகை முதலாளிகளாவதற்கு சில கல்வித்தகுதிகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை வேண்டும்

கள்ளமார்க்கெட்டில் காகிதம்விற்பனையாவதைத் தடுக்க ஒழுங்கானகாகிதகட்டுப்பாடு வேண்டும். பிரஸ் டிரஸ்டின்நிர்வாகத்தில் பங்குபெற எந்தவித பத்திரிக்கை முதலாளிகளையும் அனுமதிக்கக் கூடாது.

பணப் பரிசுத் திட்டங்கள் கொண்ட குறுக்கெழுத்துப் போட்டிகள் நடத்தப் பட்டால் அந்த வருமானத்திற்கு அதிக வரி விதிக்க வேண்டும்.

வட்டி வேந்தர்களெல்லாம் பத்திரிக்கை அதிபர்களாகி சொந்த நலத்தை உயர்த்திக் கொள்ளும் இந்த நாளில் 'சுதந்தரா'வின் ஏழு யோசனைகளும் வரவேற்கத்தக்கன. இந்த ஏற்றமிகு யோசனைகளை அமுல் நடத்தி, அரசாங்கம் நாற்றம் எடுத்துப் போன பத்திரிக்கைத் தொழிலை சீர் செய்ய வேண்டும். எழுத்துலகை ஆட்டிப் படைக்கும் 'கோயங்கோ கிரகணங்கள்' மறைய 'சுதந்தரா'வின் யோசனைகளை அறிவுலகம் வரவேற்கிறது-வாழ்த்துகிறது!

ஃ

புனுகுச் சிமிழ்

○

குடும்பத்தின் தலைமகள் குறித்து பெற்றோர்களுக்கு பெருங்கவலை! "அந்த உயிரோவியத்தின் உளம் நோகக் காரணம் அறிந்திலோமே, ஐயோ, அவள் கூந்தல் முடித்து ஒரு கிழமையாயிற்றே, குங்கும நெற்றி நினைவுக்கு வரவில்லையே, என்செய்வோம் — குல தெய்வத்தின் கோளாறோ" என அந்தக் கோதைப் பெற்றோர்கள் சுடுமணலிற் சிசுவெனக் கதறினார்கள். ஊர் ஊராய் அலைந்தார்கள், கண்டவரில் சிலர் சொன்னார்கள்; 'மகமாயியின் குறை இது—அவள் உம் மகளை ஆட்டிப் படைக்கிறாள். பெருவிழா நடத்தி, பேயோட்டினால் தான் உம் திருமகளின் சுயநினைவைக் காணலாம்" என்று.

மாமரத்து நிழல். மையத்திலே கோடாங்கிக் காரன் — மாசற்ற தோகைமயில் கோதை அந்தப் பழமையின் நடைப் பிணத்திற்கு எதிரே! பருவத்தின் உலைக் கூடத்தில் அச்சுற்றி அனுப்பப் பட்ட அந்த எழில் மோகினியின் எண்ணமெல்லாம் அங்கில்லை — அந்த மாமரத்தடியிலே இல்லை — ஏன்? அந்த ஊரிலேயே இல்லை! மாற்றாரின் களம் கவர்ந்த சேரமன்னன் மங்கையின் உளத்தையும் கவர்ந்து போய்விட்டான் — என் செய்வாள் அந்தக் கொழுந்து மங்கை. தாயும் தந்தையும் சேர்ந்துசெய்யும் இழி செயல் வேல்விழியாளின்வெறுநெஞ்சை சோக மூட்டையாக்கியது. பள்ளிப் பருவகால முதல் துள்ளி விளையாண்ட ஆருயிர் தோழியிடம் சொல்லுகிறாள், "பாங்கிப் பெண்ணே, என் நெஞ்சு புகுந்த நோய் தீர்க்க, பஞ்சு பறக்க விரட்டுகிறாரே எதிரிகளை; சேர மன்னன், அவரால்தான் முடியும். அன்னையும், தந்தையும், எத்தனை தான் வெறிக்களங்கள் அமைத்தாலும், கரி ஆட்டினது குருதியை தெளித்து நீராட்டி 'ஓடிப்போ பேயே' என ஓங்காரக் கூச்சலிட்டாலும் ஓடாது தோழீ, ஒரு நாளும் ஓடாது."—பாவை சொன்னாள் இப்படி. அந்தக் காந்தச் சிலையை கவிஞன் எப்படிப் பேசவைத்திருப்பான் என நினைக்கிறீர்கள்! இதோ,

காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—பேராட்டு
வென்று களங்கோண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்
னெஞ்சங் களங் கோண்ட நோய்

பிறைவானம்...

[9-ம் பக்க தொடர்ச்சி]

அதற்கு மேல் அவனால் நகர முடியவில்லை. நெஞ்சு படபடத்தது; கைகள் நடுங்கின; கால்கள் மரத்தன; கண்கள் இருண்டன; உடல்துவண்டது; அவன் கீழே விழுந்தான்; நினைவிழந்தான்.

ஆனால், அடுத்த கணமே 'ஐயோ!' என்று மற்றொரு அலறல் கேட்டது. சுடுகாட்டையே கிடுகிடுக்க வைத்த அந்தப் பெருங்குரல் ராசனின் காதுகளுக்கு எட்டவே யில்லை.

ஃ ஃ ஃ

பளபள வென்று பொழுது விடிந்தது. மயக்கம்தெளிந்தது. கண் விழித்தான் ராசன். பயம் அவனை விட்டபாடில்லை. திடுக்கிட்டு எழுந்தான்.

ஆனால், அவனுக்குக் கொஞ்ச தூரத்திலே, அந்தப் பேயும் உருண்டு கிடந்தது.

ராசன் பகலின் துணையைக் கொண்டு அந்தப் பேயை நெருங்கினான்.என்னஆச்சரியம்! அது பேயல்ல; ஒரு பயங்கரமான மனித உடல்! இரத்த வெள்ளத்திலே கிடந்தபெருத்த உருவம்! அதன் மார்பிலே பதிந்துகிடந்ததுராசனின்கத்தி.

இரவு ராசனின் கையிலிருந்து விழுந்ததல்லவா அந்தக் கத்தி, அது கற்களுக்கிடையே செங்குத்தாக நின்று கொண்டிருக்க வேண்டும். ஓடிவந்த பேய் கல்தடுக்கி கீழே சாய, கத்தியும் நேராக அதன் மார்பில் தைத்திருக்க வேண்டும். இதுதான் ராசனின் யோசனையில் உதித்த உண்மை.

அதற்குள் கூட்டம் கூடி விட்டது. பேய் பரிசோதிக்கப் பட்டது. ஒரு பயங்கர உண்மையும் வெடித்தது. அந்தப் பேய் பேயல்ல; ஒரு கோரக் கொலைகாரன்; ஊர் பெருந்தனக்காரர் ஒருவரைக் கொன்றவன்; தலைமறைவானவன்; மாயாண்டித் தேவன் என்ற பயங்கரவாதி. பேய் உருவத்தில் மறைந்திருப்பது; அந்தப் பாதையில் நடமாடுபவர்களை பயமுறுத்துவது; பணம் பறிப்பது; இதுதான் மாயாண்டித் தேவனின் தொழில்! முதலில்லாத பெரிய தொழில்! கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்க, சுதந்திரமாகக் கொள்ளையடிக்க, அவன் செய்த தந்திரம்தான் அந்தப் பேய்க் கோலம். மக்களின் மூடநம்பிக்கைக்கு ஏற்ற திட்டம்.

உயிரோடு ஊசலாடிக் கொண்டிருந்த மாயாண்டித் தேவன் போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டான். பேயைப் பிடித்த 'சூரப்புலி' ராசனுக்கு ஊரெல்லாம் வாழ்த்து; ராணிக்கோ வெட்கம்!

ஃ ஃ ஃ

எப்படி இந்தக் கதை!

'பேய், பிசாசு' என்று பயந்து சாகிறார்களே சில அப்பாவிகள், அவர்களிடம் சொல்லுங்கள் இந்தக் கதையை; 'அப்படியா' என்று மூக்கில் விரல் வைப்பார்கள். உண்மையையும் உணருவார்கள். என்ன தெரிந்ததா?

— சொர்ணம்

புனைகதைக் காவலன்

"நாரங்களற்ற முடவன் காட்டாற்று வெள்ளத்திலே எதிர் நீச்சலடிக்க எண்ணுவானா?..ஐயோ தம்பி! அப்படிப் பட்டதுதான் உன் ஆகாத நினைவும். வேண்டாம் உனக்கிந்த வேதனை ஆசை! விபரீத எண்ணம்!"

"விபரீத எண்ணமா?..."

"விளக்கம் வேறு வேண்டுமா தம்பி?"

"ஆனாலும் அப்பா! அதோ பாருங்கள், அந்த அழகு நிறை வண்ண மாளிகையை! கண்களுக்குள்ளே கட்டவிழ்த்த கன்றெனப் பாயும் அதன் வனப்பு, என் கருத்துக்குள்ளே ஆசையெனும் சூறாவளியை..."

"போதும் மகனே, போதும்! மறந்துவிட்டாயே மற்றொன்றை; அந்த சோபிதப் பெருங் குடிலைப் பார்க்கவும் கூடாத பஞ்சை--பட்டினிப் பெருமகன் உன் தந்தை என்பதை! உன்னை அதன் நிழலுக்குக்கூட அழைத்துச்செல்லமுடியாதே என்னால்"

"அப்படியானால்..."

"சோர்ந்து விடாதே மகனே! வாழ்வின் கடைக் கோடியிலே நான்......சாவைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறேன். என்னால் முடியுமா சொல், உன் ஆசையை நிறைவேற்ற? ...ஆனால், உன் ஆசை நிராசையாக மாறாதிருக்க வேண்டுமானால் ஒரேவழி-உன் கையிலே-நல் உழைப்பிலே!"

வறுமையும் ஏழ்மையும் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் அழகு நடனம் புரியும் மேனி; தளர்ந்த கிழ உருவம்; அவர் தந்தை! வாழ்வை உணரா வருங்காலம்; வளர வேண்டிய வானத்துப் பிறை; இவன் மகன்! அந்த இருவருக்கும் நடந்த உரையாடல்தான் மேலே கண்டது.

தந்தையோ, சூழ்ந்திருக்கும் பெரும் பள்ளத்தை பார்த்து பயந்தபடி வாழ்வெனும் நெடுஞ் சாலையிலே அடிமேல் அடி வைத்து நடந்து செல்லும் அடிமை குமாஸ்தா; ஏழையிலும் ஏழை. ஆனால் அந்த ஏழையின் 'மழலை'க்கோ மாளிகையின் மேல் ஆசை. உலாவச் செல்லும் நேரத்தில் உள்ளத்தை 'வெட்'டெனப் பற்றியிழுக்கும் எழில் இல்லமாம்--'கேட்ஷில் பிளேஸ்' எனும் 'பணம் பதிந்து' கிடக்கும் பெருமாளிகைதான் அவனது இன்பக் கனவு.

சிரிப்பர் பலர் அந்தச் சிறுவன் சித்தம் கெட்டவனே, பைத்தியக்காரனே என்று! ஆனால், அவனது அன்றைய சபலம்தான் அவனது வாழ்வுச் சபதமானது! உண்மையே; அந்தச் சிறுவனின் அந்திம கால மரண மூச்சு காற்றோடு கலந்தது அந்த வண்ண மாளிகையில்தான்---அவனது எண்ணக் கோட்டையில்தான்.

கதை போலிருக்கும்; ஆனால் கதையல்ல; எண்ணற்ற துன்பக் கதைகளை நாட்டுக்குச்சொல்லிய ஒரு எழுத்துச் சிற்பியின் வாழ்வுக் கதையிலே ஒரு பொன்னேடு; எதையும், எப்போதும், எப்படியும் செய்து காட்ட முடியும் என்பதை விளக்கும் நல்லேடு!

ஃ ஃ ஃ

அவன் ஒரு எழுத்தாளன். ஆனால் வான மண்டலத்தே இறைந்து கிடக்கும் எண்ணற்ற தாரகைகளில் ஒன்றைப் போல் என்றல்ல.

நாட்டிலே நடமாடிக்கொண்டிருந்த பேனா மன்னர்கள் அனைவரிலும் அவன் மாறுபட்டவன். தனக்கென தனிப் பாதையிலே, வேறுபட்ட புதுப் பாதையிலே நடந்து சென்றான்.

அவனது அந்தப் பாதையிலே பணம் படைத்தோரின் பாபக்குரல் கேட்கவில்லை; பரத்தையரின் பாகுமொழியும், பாதச் சிலம்பொலியும் எட்டவில்லை; உல்லாசக் களியாட்டம் இல்லை; சல்லாப வெறியாட்டம் இல்லை! ஆனால்...வாழ்வெனும் நெருப்பு ஜ்வாலையிலே வாடி வதங்கும் தளிர் இலைகளாம்—வறுமை எனும் பெரும் புயலிலே சிக்கிச் சுழலும் சிறு துரும்புகளாம் ஏழைகளின் ஏக்கக் குரல் கேட்டது; பராரிகளின் பரிதாபஒலம் கேட்டது; வாழ முடியாதவர்களின் அவல நிலை அழுகைக் குரலாக திக்கெட்டும் கேட்டது!

அந்தப் பாதையில்தான் அவன் நடந்தான். அதிலே அவன் பதித்துப்போன பாதச் சுவடுகள் அனைத்தும் அழியாத முத்திரைகளாகிவிட்டன.

சமுதாயத்தின் கீழ்க்கோடிக்கு வெறுத்துத்தள்ளப்பட்ட ஏழைக் குடும்பங்களின் இதயக் குமுறலையும், சாவுக்கும் வாழ்வுக்கு மிடையே தினசரிப் போராட்டம் நடத்தும் மத்திய தர மக்களின் போர்க்கள ஓசையையும்தான் அவன் எழுத்தாக்கினான். ஆகவேதான் அவனது எழுத்துக்கள் காலக்கண்ணாடிகளாயின! வாழ்வுப் படங்களாயின!



∴ ∴ ∴

'இந்தப் பாழ் உலகில் பிறந்த ஐந்தாவது ஆண்டிலேயே பாடுபடவேண்டும்; பள்ளி செல்ல வேண்டிய நேரத்தில் உழைக்கவேண்டும்; பிழைக்க வேண்டும்' என்ற காலம் இட்ட கட்டளையோடுதான் தொடங்கிற்று அந்த இலக்கியப் பெருமகனின் வாழ்வுக் கதை.

வழக்கொன்றில் சிக்கிய தந்தை சிறைக்குள் 'கூட்டுக் கிளி'யானார். வெளியே சிறுவன் சிறகொடிந்த கிளியாக! திக்கற்ற அவனுக்கு ஒரே வழி? உழைக்கத்தானே வேண்டும்?

உழைத்தான். இருட் குகையோ, இதயமற்ற பாழ்மண்டபமோ என்றெண்ணக் கூடிய சாமான் கிடங்கொன்றிலே பாட்டில்களுக்கு 'லேபில்' ஒட்டும் 'உத்தியோ'கத்தில் அமர்ந்தான் அவன். அவனது பட்டுக் கரங்கள் துவண்டு சாயும் அளவுக்கு உழைத்தான். பளிங்கு மாளிகையின் நினைவு ஒரு பக்கம்; 'ஒரே வழி—உன் கையிலே—நல் உழைப்பிலே' என்ற தந்தை சொல்லிச்சென்ற 'தாரக மந்திர'த்தின் தேய்ந்து போன ஓசை மறுபக்கம். இந்நிலையில் அவன் பகலெல்லாம் 'லேபில்' ஒட்டினான். இரவெல்லாம் படித்தான். பள்ளிக்கூடத்தை இரண்டாண்டுகளுக்கு மேல் பார்த்திராத அவன், நள்ளிரவிலே, நாடுறங்கும் நேரத்திலே, தெரு விளக்கு தந்த சிறு ஒளியிலே படித்தான்; பழைய புத்தகக் கடைகளில் சிறுதொகை கொடுத்து வாங்கி நிறைய படித்தான்! அதன் விளைவாக எழுத வேண்டுமென்ற புது ஆவலையும் நெஞ்சத்திலே வரித்துக் கொண்டான்.

∴ ∴ ∴

வாழ்வு நிலை சற்று உயர்ந்து வழக்கறிஞர் ஒருவரிடம் கணக்காளராகப் பணியாற்றியநேரத்திலும் 'எழுத்தாளனாவோம்' என்ற ஆசையும் குன்றாது உயர்ந்தது.

அந்த ஆசையெனும் பெருந் தோட்டத்திலே, அவனது இருபத்து நான்காவது வயதிலேதான் பழுத்தது முதல்கனி!

பணத்தின் வாடையையே காட்டாது பத்திரிகையில் இடம்பெற்றது அவனது முதல் கதை. ஆனால் அவனே அழுதானும், ஆனந்தத்தால்; பைத்தியம் பிடித்தவனைப் போல வீதிகளிலே ஓடித் திரிந்தானும்; தனது 'சொந்த' எழுத்தை—எத்தனையோ முறை எழுதி எழுதிக் கிழித்தபின் முதல் எழுத்தை ஏட்டிலே கண்டதில் அத்தனை மகிழ்ச்சி அவனுக்கு! அந்த மகிழ்ச்சியின் அரவணைப்பிலே அவனது எழுத்துப்பணி மீண்டும் நீண்டது.

ஃ ஃ ஃ

'பிக்விக் பேப்பர்ஸ்' — இதுதான் அந்த ஏழை எழுத்தாளனின் நூல்வடிவு முதல் காவியம். சமூகத்தில் ஊறிக் கிடந்த சீர்கேடுகளை, அவைகளை அழித்தொழிக்கும் மார்க்கத்தை, கிண்டலும் கேலியும் கலந்த புது நடையிலே, நாடு ஏற்ற நகைச்சுவைப் பாணியிலே எழுதினான். அந்த முதல் முழக்கம் அவனது வெற்றி கீதத்தையும் சேர்த்து இசைத்தது.

வாழ்வின் கோரப்பிடியிலே சிக்கிய சிறுவன் ஒருவனை சமூகம் பிடித்தாட்டும் பயங்கரக் கதையைக் கூறும் ஆலிவர் ட்விஸ்ட் — இரும்பு இருதயங்களிலே மோதி மோதித் துவளும் மற்றொரு சிறுவன் டேவிட் காப்பர்பீல்ட் — புரட்சியெனும் பெரும் சூறாவளியில் சிக்கிய பிரெஞ்சு பூமியின் பரிதாப நிலையைத் திரையாகக் கொண்டு வரைந்த அற்புத ஓவியமாம் 'இரு நகரங்களின் கதை' எனும் காதல் காவியம் — இவையெல்லாம் அந்த இலக்கியப் பித்தனின் அடுத்துவந்த சுவைப் படைப்புகள்.

புகழும், அதை அடுத்து பணமும் சேரச்சேர அவனது இலக்கிய வெறி மொத்தத்தில் பதினேழு உயர் நவீனங்களை உலகிற்குத் தந்தது

ஃ ஃ ஃ

மாதம் முழுவதும் 'லேபில்' ஒட்டினால் ஒன்று அல்லது இரண்டு பவுன் கூலி பெற்றான் ஒருநாள். ஆனால் அவன் எழுத்துக்களை உலகம் உணர்ந்த நாளில், அவனது எழுதுகோல் சிந்திய ஒவ்வொரு வார்த்தையும் மூன்று பவுனைத் தேடித் தந்தது. அன்றுவரை உலகம் எவருடைய எழுத்துக்கும் அத்தனை விலை கொடுத்ததில்லையாம்.

எழுத்தால் பணம் குவித்த அந்த இலட்சியவாதியின் 'சிறுபிள்ளை'க் கனவு நினைவாகும் காலமும் வந்தது. ஏக்கப் பார்வையிலே அவன் கண்களில் நிழலாடிய 'கேட்ஷில் பிளேஸ்' எனும் அந்த மாளிகை அவனது சொந்தப் பொருளானது. மழலைமொழி பேசிய காலத்தில் 'மனக் கோட்டை'யாகத் தோன்றியது; ஆனால் அந்த இன்பக் கோட்டையிலேதான் தனது இறுதி மூச்சை விட்டான் அந்த இலக்கிய மேதை — எழுத்திலே புதுப்பாதை கண்ட புலமைப் பித்தன்— அந்த சார்லஸ் டிக்கன்ஸ்.

கடைசிப்பக்கம்

தம்பிதுரை: பேரூர்.

(?) மனிதன் மனிதத் தன்மையுடன் வாழ எப்போது நினைக்கிருன்?

மிருகத்தன்மை மதிப்பிழந்த போது!

முருகேசன்: காரமடை.

(?) சங்க இலக்கியங்களுக்கு இல்லாத மதிப்பு இதிகாசங்களுக்கு ஏற்படக் காரணம் என்ன?

புத்திசாலிப் பெற்றேர்கள் நொண்டிப் பிள்ளைகளையும், குருட்டுக் குழந்தைகளையும் பொது மக்களிடம் காட்டித் தானே வயிறு வளர்க்க முடியும். எனவே தான் கண் அவிந்த இதிகாசங்களை சந்தைக்கு அழைத்து வந்து துண்டை விரித்துவிட அழைக்காமலே வருகிருர்கள், பலர்! கற்பனை வளம் என்னும் காந்தி நிறைந்து காணப்படும் சங்க இலக்கியம் போன்ற குழந்தைகள் பூரண வளர்ச்சி பெற்றவை—அவை எப்படி சோம்பேறிகளுக்குச் சோறு போடும்? எனவேதான் அதை நெருங்கவே பலர் அஞ்சுகின்றனர்.

அங்கு; வேப்பேரி.

(?) "புத்திசாலிகள் செய்தித்தாளை அதிகமாகப் படிக்க மாட்டார்கள்" — என்று பார்லிமென்டில் நேரு சொன்னரே, அப்படியானல் புத்திசாலியான நீர் செய்தித்தாள் படிப்பதுண்டா?

அய்யையோ! நான் செய்தித்தாளைப் படிப்பதில்லை. உண்மையில், புத்திசாலிகள் செய்தித்தாளைப் படிக்கக் கூடாது. அதற்குப் பதில் நேருவின் அன்றாடப்பேச்சுக்களைப் படித்தாலே போதும்; ஏனென்ருல் உலகச் செய்திகளின் திருந்திய பதிப்புத்தானே அவரது பேச்சுக்கள்!

புராணன்: குன்னூர்.

(?) கன்னியரைப் போல நினைத்து கடவுளைக் காதலித்தால், கன்னியர்தரும் இன்பத்தை கடவுள் தருவாரா?

கடவுள் காம இன்பத்தைக் கொடுத்ததால்தானே என்னவோ, பக்த மீராவும், ஸ்ரீ ஆண்டாளும் ஆண்டவனின் அன்பிற்காக தவம் கிடந்தார்கள். ஆனால் ஆண்கள் விஷயத்தில் கடவுள் அவ்வளவு கருணை காட்டுவதாக புராணங்கள் சொல்லவில்லை.

புதையல்......

[7-ம் பக்க தொடர்ச்சி]

சிறு கல்லைக் கொண்டு போய், செப்பேட்டில் குறிக்கப்பட்ட இடத்தில் வைத்தால் குளிசக் கல்புதைக்கப்பட்ட இடத்துக்கு அந்த சிறுகல் காந்தத்தால் இழுக்கப்பட்டது போல ஓடுமாம். அதைக் கொண்டு, குளிசக் கல்லையும், குவிந்திருக்கும் பொன்னையும் எடுக்கலாமாம். இந்த ரகசியத்தை, கொல்லருடைய இளைய மகன் ஊரில் சொல்லிக் கொண்டிருந்தானும். அவன் திருமண விழாவுக்குப் போகாதவன் போலும். 'அப்பா எப்போதுமே, செப்பேட்டையும், சிறுகல்லையும் மடியிலேயே வைத்திருப்பார்; அது கடலிலே போய்விட்டது—இனி என் செய்வது' என்று, அவன் அடிக்கடி கண்ணீர் விடுவானும்—இது எவ்வளவு தூரம் உண்மையோ யார் கண்டது?" என்று முடித்தார் கிழவர்.

"ஐயோ! அந்த செப்பேடும், சின்னக் கல்லுமாவது எனக் கிட்ட கிடைக்கக் கூடாதா?" என்று, கரகரப்பான தொனியிலேகத்திஞன் ஐயப்பக்கிழவன்!

மாயாண்டிக் கிழவர், தன் மடியிலேயிருந்த சிறு முடிச்சையும், தாள்உறையையும் தடவிப் பார்த்துக் கொண்டார்.

அப்படி அவர் தடவிப் பார்த்ததை ஐயப்பன் கவனித்து விட்டான்.

"இன்னும் பொழுது விடியவில்லையே" என்று மாயாண்டி ஆகாயத்தை நோக்கினர்.

[வளரும்]



மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது, அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.